பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 28 வியாழக்கிழமை 14.12.2023 கதிர் 398

# நாணய நிதிய நிபந்தனைகளை தவிர எமக்கு வேறு வழியில்லை

## நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி தெரிவிப்பு

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளைப் பின்பற்றுவதன் மூலம் மட்டுமே நாம் பொருளாதாரச் சரிவிலிருந்து விடுபடமுடியும். அதுதவிர வேறு வழியில்லை. எவ்வளவு சிரமமானதாக இருந்தாலும் அந்த நிபந்தனைகளைப் பின்பற்றி பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேற்று நாடாளுமன்றத்தில் விசேடஉரையொன்றைஆற்றிய போதே இதனைக் குறிப்பிட்டார்.

அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் பல அரசியல்வாதிகள் மக்கள் மத்தியில் உருவாக்கும் கற்பனைக் கதைகள் தொடர்பில் நாட்டு மக்கள் அவதானமாக இருக்க ☞ 2

## இது ரகசியம் அல்ல!

இலங்கைக்கான நீடித்த கடன் வசதித் திட்டத்தின் இரண்டாம் கட்டக் கொடுப்பனவை விடுவிப்பதற்கான அனுமதியை சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் சபை நேற்று வழங்கியுள்ளது. கொழும்பு ஆளும்தரப்பு பெரும் எதிர்பார்ப்போடு காத்திருந்த உதவி இது. இந்த உதவி கிடைத்தால் பொருளாதார மீட்சிப் பாதையில் வீறு நடை போடமுடியும் என்பது அரசுத் தலைவர் உள்ளிட்ட ஆட்சியாளர்களின் எதிர்பார்ப்பு. அதனை ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடாளுமன்றத்திலும் வெளிப்படுத்தியிருந்தார். இதே பாதையில் போனால் இனி எல்லாமே சரியாகிவிடும் என்பதே அவரது உரையின் சாரமாக இருந்தது. ☞ 2

## விசேட கலந்துரையாடல்

நாட்டில் தற்போது நிலவும் மழையுடனான காலநிலை தொடர்பான அவசரகால நிலைமைகள் தொடர்பான விசேட கலந்துரையாடல் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் தலைமையில் இடம்பெற்றது.

கொழும்பிலுள்ள இடர்முகாமைத்துவ மத்தியநிலையத்தின் அவசரசெயற்பாட்டு மையத்தில் இந்தக் கலந்துரையாடல் நிகழ்வு இடம்பெற்றது. பதுளை மாவட்டத்தில் நிலவும் மண்சரிவு அபாய நிலைமை குறித்து கலந்துரையாடலின் போது விசேட கவனம் செலுத்தப்பட்டது.

ஹல்தும்முல்ல கெலிபனாவெல மலையில் ஒக்டோபர் 9 ஏற்பட்ட ☞ 9

# கூட்டமைப்பின் நீட்சிதான் உலகத் தமிழர் பேரவை ரணிலுக்கு வெள்ளையடிப்பதே அதனது முயற்சி

## கஜேந்திரகுமார் கடும் கண்டனம்

உலகத் தமிழர் பேரவை என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நீட்சிதான். அதன் இமயமலைப் பிரகடனத்தை நிராகரிக்கின்றோம். அது ரணிலின் ஆட்சிக்கு வெள்ளையடிக்கும் முயற்சி.

இவ்வாறு குற்றங்சாட்டினார் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

உலகத்தமிழர் பேரவையின் செயற்பாட்டைக் கண்டித்தும், இவ்விடயத்தில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியும் நேற்று கொழும்பிலுள்ள தனது இல்லத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

பௌத்த தேரர்கள் உள்ளிட்ட தரப்பினருடன் நேபாளத்தில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையை அடுத்து, கடந்த ஏப்ரல் 27 இல் கைச்சாத்திடப்பட்ட 6 அம்சங்களை உள்ளடக்கிய 'இமயமலை' பிரகடனத்தைக் கடந்த வாரம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கையளித்துள்ள உலகத் தமிழர் பேரவை உறுப்பினர்கள், அதுகுறித்து இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள பல்வேறு அரசியல்கட்சிகளின் பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

அதுமாத்திரமன்றி இலங்கையிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளையும் சந்தித்து அப்பிரகடனத்துக்கு அங்கீகாரம் கோரியுள்ளனர்.

முதன்முதலாக உலகத்தமிழர் பேரவை உருவாக்கப்பட்டபோது, அது பல்வேறு அமைப்புக்களையும் உள்ளடக்கியதோர் குடை அமைப்பாகவே காணப்பட்டது. அதன்படி அவ்வமைப்பு உருவாக்கப்பட்டபோது அதில் ☞ 8

# மயிலத்தமடு மேய்ச்சல் தரை ஆக்கிரமிப்பு குறித்து ஜனாதிபதியுடன் கலந்துரையாடல்

## தமிழ் எம்.பிக்கள் நேற்று நடத்தினர்

மட்டக்களப்பு - மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரை பிரச்சினை தொடர்பாக இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன் மற்றும் இரா.சாணக்கியன் ஆகியோர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடினர்.

இச்சந்திப்பு தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்ததாவது:

மயிலத்தமடு, மாதவனை பண்ணையாளர்களின் போராட்டம் 90 ஆவது நாளை எட்டியுள்ள நிலையில், நானும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனும் ஜனாதிபதியை சந்தித்து, கலந்துரையாடினோம்.

இதன்போது, மயிலத்தமடு, மாதவனை பகுதியில் தொடர்ச்சியாக மாடுகளுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகள் தொடர்பான நிழற்படங்கள் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இந்தப்பிரச்சினைக்கு தீர்வாக ஜனாதிபதி கூறிய எந்தவொரு விடயமும் நடைமுறைப்படுத்தப் படவில்லை என்ற விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களின் விடுதலை தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது என்றார்.

இதேவேளை, மயிலத்தமடு, மாதவனை பண்ணையாளர் ☞ 8

# ஹிங்குராங்கொட விமான நிலையம் சர்வதேச தரத்திற்கு உயர்த்தப்படும்

## சர்வதேச கிரிக்கெட் மைதானமும் அங்கு அமையும்

ஹிங்குராங்கொட விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக அபிவிருத்தி செய்து அதன் அருகாமையில் சர்வதேச கிரிக்கட் மைதானம் ஒன்றை நிர்மாணிக்கும் திட்டம் உள்ளதாகவும், அடுத்த வருடம் அது நடைமுறைப் படுத்தப்படும் எனறும் சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று கிராம மட்டத்தில் சிறிய மைதானங்களை நிர்மாணிப்பதற்கும், அபிவிருத்திசெய்வதற்கும் இந்த ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் 1.5 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், சிதத் வெத்தமுனி, அரவிந்தத சில்வா மற்றும் இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் தலைமையில் இந்த நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும் என்றும் அமைச்சர் கூறினார். ☞ 8

# எம்.ஆர்.ஐ. இயந்திரங்கள் கொழும்பில் செயலிழப்பு

மின் விநியோகம் தடைப்பட்டதால் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் இரண்டு எம்.ஆர்.ஐ. இயந்திரங்கள் செயலிழந்துள்ளதாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் ருக்ஷான் பெல்லன தெரிவித்தார்.

அந்த இயந்திரங்களை திருத்துவதற்கு விரைவில் நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதேநேரம், கடந்த சனிக்கிழமை (09) மின் விநியோகம் திடீரென தடைப்பட்டதால், கொழும்பு தேசிய வைத்தியசாலையின் இரண்டு எம்ஆர்ஐ இயந்திரங்கள் செயலிழந்துள்ளதாக நிறைவுகாண் ☞ 8

# கேட்ஸ் அறக்கட்டளையின் அதிகாரிகள் இலங்கையில்

பில் அன்ட் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளையின் மூத்த அதிகாரிகள் இலங்கை பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் அவர்களை சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பு கொழும்பில் உள்ள பாதுகாப்பு இராஜாங்க அமைச்சில் இடம்பெற்றது. பாதுகாப்பு இராஜாங்க அமைச்சுக்கு வருகைதந்த இந்த அமைப்பின் சர்வதேச அபிவிருத்தி மற்றும் அவசரகால நிலைமைகளுக்கு பொறுப்பான பிரதி இயக்குநர், கலாநிதி வலேரி பெமோ தலைமையிலான பிரதிநிதிகள் குழுவினர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரினால் வரவேற்கப் பட்டனர்.

தெற்காசியாவில் தயார்நிலை மூலம் ☞ 9

# பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மின்சார சபைக்கு அழைப்பு விடுப்பு

நாடு முழுவதும் மின் விநியோகம் தடைப்பட்டமை தொடர்பில் விவரங்களை முன் வைக்குமாறு மின்சார சபைக்கு அறிவித்துள்ளதாக இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்குமுன்னர் மின் விநியோகம் தடைப்பட்ட சந்தர்ப்பங்களில் ஆணைக்குழு வழங்கிய பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாமை தொடர்பில் தெளிவுபடுத்துமாறும் கோரப்பட்டுள்ளது.

இந்த விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு எதிர்வரும் 20 ஆம் திகதி மின்சார சபையின் அதிகாரிகள் பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டுள்ளனர். ☞ 9

# திருமலையில் இந்தியாவுக்கு காணி வழங்குவதை எதிர்த்துப் போராட்டம்

## சேருநுவரவில் மக்கள் போராட்ட இயக்கம் நடத்தியது

இந்தியாவுடன் திருகோணமலையை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ள எரிசக்தி உடன்படிக்கையை உடன் இரத்துச் செய்ய வேண்டுமென மக்கள் போராட்ட இயக்கத்தினர் கோரிக்கை விடுத்தனர்.

சேருநுவர பகுதியில் நேற்றைய தினம் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தின்போதே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது. அந்த இயக்கத்தின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் வசந்த முதலிகே இது தொடர்பில் தெரிவித்ததாவது:

இந்தியாவுடன் ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டுள்ள எரிசக்தி உடன்படிக்கை காரணமாக, ☞ 9

# நெடுஞ்சாலைகளிலிருந்து அதிரடிப்படையை அகற்ற கால அவகாசம் கேட்கிறார் அமைச்சர்

அதிவேக நெடுஞ்சாலைகளுக்கு உரிய பாதுகாப்புத் திட்டம் வகுக்கும் வரை எஸ்.டி. எஃப். அதிகாரிகளை பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்த கால அவகாசம் வழங்குமாறு போக்குவரத்து, நெடுஞ் சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலசிடம் அமைச்சர் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நிலையியற் கட்டளைகள் 27/2 இன் கீழ் பாதுகாப்பு வரவு செலவுத் திட்டம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய வாய்மூலக் கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதிவேக நெடுஞ்சாலைகளில் இருந்து விசேட அதிரடிப்படை அதிகாரிகளை அகற்றுமாறு பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர், போக்குவரத்து ☞ 8

## இனி இது .....

ஆனால், நாணய நிதியமோ தனது அறிக்கையில் இதற்கு எதிர்மாறான விடயங்களைத் தெரிவித்திருக்கிறது. இலங்கையில் சமூக அமைதியின்மை மீண்டும் ஏற்படும் அபாயம் உள்ளது என்று அது எச்சரிக்கின்றது. இதனால் இலங்கையின் பொருளாதார மறுசீரமைப்புத் திட்டங்கள் 2024 தேர்தல்களுக்குள் தடம்புரளும் சாத்தியங்கள்இருக்கின்றனஎன்றும் அது எச்சரித்துள்ளது. மக்களின் கைகளில் பணம் இல்லாதமையே இதற்குக் காரணம் என்றும் அது கூறியுள்ளது.

இலங்கைக்கான நீடித்த கடன் வசதித் திட்டத்தை ஆரம்பித்தபோது இருந்ததைவிட இப்போது அந்தத் திட்டம் தோல்வியடைவதற்கான ஆபத்துக்கள் அதிகரித்துள்ளன என்றும்அந்தஅறிக்கைகூறுகின்றது.

'வரி விகித உயர்வுகள் மற்றும் எரிசக்திதுறையில்கொண்டுவரப்படும் விலை உயர்வு, போதிய ஊழல் எதிர்ப்பு முயற்சிகள் இல்லாமை மற்றும் தாமதமான உள்ளாட்சித் தேர்தல்கள் மற்றும் வருமான வீழ்ச்சி ஆகியன காரணமாக சமூக அமைதியின்மை மீண்டும் தோன்றக்கூடும்' என்று நாணய நிதியத்தின் அறிக்கை கூறுகிறது.

'கடன் மறுசீரமைப்பை செயல்படுத்துவதில் ஏற்படும் தாமதங்கள் பலவீனமான நம்பிக்கை மற்றும் இறுக்கமான நிதி நிலைமைகளுக்கு வழிவகுக்கும்' என்றும் எச்சரித்துள்ளது.

ஒரு பக்கத்தில் நாணய நிதியக் கடன் கிடைத்துவிட்டதால் எல்லா-ப் பிரச்சினைகளும்தீர்ந்துவிடும்என்று கதையளக்கும் ஆட்சியாளர்கள். மறுபுறத்தில் கடனைக் கொடுத்துவிட்டு அதனாலேயே நாட்டில் அமைதியின்மைஏற்படப்போகின்றது எச்சரிக்கும்நாணயநிதியம். "என்ன கொடுமை சார் இது?" என்றுதான் கேட்கத் தோன்றுகின்றது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## நாணய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டுமெனவும், இவ்வாறான கற்பனைக்கதைகளில்சொல்லப்படும் விடயங்களை நிறைவேற்ற முயற்சிப்பதன் மூலம் நாடு மீண்டும்வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்படும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அவர் தனது உரையில் தெரிவித்ததாவது:

சற்று நேரத்திற்கு முன்னர், நாட்டின் மறுசீரமைப்புக்கான நீடிக்கப்பட்ட கடன்வசதியின் இரண்டாவது தவணை அங்கீகரிக்கப்பட்டதாகசர்வதேசநாணயநிதியம் அதிகாரப்பூர்வமாக அறிவித்தது. இப்போது வங்குரோத்து அரசு என்ற முத்திரையை கழற்றிவிட ஒரு தீர்க்கமான நடவடிக்கையை எடுத்துள்ளோம் என்று அவர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர். அந்தப் பயணத்தில் ஒரு முக்கிய இடத்தை அடைந்துவிட்டோம்என்றுஅவர்கள் அறிவித்துள்ளார்கள். இந்தச் சவாலான மற்றும் வெற்றிகரமான பயணத்திற்கு தலைமை ஏற்றமை குறித்து எனக்கு பணிவான மகிழ்ச்சியே உள்ளது.

நான்கடந்தஆண்டுவங்குரோத்தானநாட்டையேபொறுப்பேற்றேன். இந்த வங்குரோத்து நாட்டைப் பொறுப்பேற்க இந்த நாட்டில் எந்த அரசியல் கட்சித் தலைவர்களும் முன்வரவில்லை. இந்த சவாலை ஏற்க அனைவரும் பயந்தனர். இப்போது நாடாளுமன்றத்தில் உரையாற்றும் வீரர்கள் மற்றும் தலைவர்கள் எவருக்கும் நாட்டை ஏற்க தைரியம் இருக்கவில்லை. ஆனால் நான் அந்தச் சவாலை ஏற்றுக்கொண்டேன். ஆபத்தான கயிற்றுப் பாலத்தை கடக்க நான் என்னை அர்ப்பணிப்பேன் என்று அன்று கூறினேன். என்னிடம் இருந்ததெல்லாம்உறுதியும்திட்டமும் மாத்திரமே. அப்போது எனது கட்சியைப்பிரதிநிதித்துவப்படுத்திஒரு உறுப்பினர்கூடநாடாளுமன்றத்தில் இருக்கவில்லை. இந்த கயிற்றுப் பாலத்தின் பயணத்தை சிலர் கேலி செய்தனர். அவமதித்தனர். ஆனால் இந்த நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் என்னை ஆதரித்தனர். அவர்களையும் கேலி செய்தனர்.

நாட்டு மக்கள் எனக்கு ஆதரவளித்தனர். நாட்டின்நலனுக்காகவும், இலங்கையின்பாதுகாப்பிற்காகவும் பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டு இந்தப் பயணத்திற்கு ஒத்துழைப்பு வழங்கினர். வியாபாரிகள் பிரச்சினைகளை எதிர்கொண்டனர். அரச மற்றும் தனியார் ஊழியர்கள் சிரமத்திற்கு உள்ளாகினர். பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மருத்துவர்கள் எனப் பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்களுக்கும் வாழ்க்கை நெருக்கடிகள் ஏற்பட்டன. நான் எடுத்த சில கடினமான முடிவுகளை நாட்டு மக்கள் சிரமத்துடன் ஏற்றுக்கொண்டனர்.

நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து காப்பாற்றுவதற்காகத்தான் அந்தத் துன்பங்கள் அனைத்தையும் எதிர்கொள்ள நேரிட்டது. நாம் அனைவரும் பொறுமையுடன் செய்த அர்ப்பணிப்பாலும் அனுபவித்ததுன்பத்தாலும், நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து மீட்கும் வாய்ப்பு இப்போது கிடைத்துள்ளது.

நாட்டிற்காகஅந்தத்துன்பங்களை அனுபவித்த மக்களும், அதே போன்று, நாடாளுமன்றத்தில் எனக்கு ஆதரவளித்த அனைவரும் நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்கும் போராட்டத்தில் பங்கேற்ற பெருமைக்குரியவர்கள். அந்த அனைவரினதும் பங்களிப்பு நமது வரலாற்றில் பொன் எழுத்துக்களால் எழுதப்படும் என்பதில் சந்தேகமில்லை.

உலகில்வங்குரோத்துஅடைந்த நாடுகள் இயல்பு நிலைக்கு திரும்ப எடுத்துக்கொண்டதைவிட குறைந்த காலத்தில் நம்மால் மீண்டுவர முடிந்தது. மேலும், மக்கள் மீது குறைந்தளவுசுமையைசுமத்திஇந்த சவாலை வெற்றிகொள்ள முடிந்தது. இது ஒரு பெரும் வெற்றியாகும்.

கிரேக்க நாட்டில் 2008ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. அவர்கள் இயல்பு நிலைக்குத் திரும்ப 10 ஆண்டுகளுக்கும்மேல்ஆனது. அவர்கள்நெருக்கடியைச்சமாளிக்கதனிநபர் வருமானவரியை 45% ஆக உயர்த்தினார்கள். வரவு செலவுத் திட்ட இலக்குகளை அடைய அனைத்து ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதியங்கள் அதிகளவில் குறைக்கப்பட்டன. இப்படி பல கட்டுப்பாடுகளும் தடைகளும் விதிக்கப்பட்டன. நாட்டு மக்கள் தாங்க முடியாத துன்பங்களை அனுபவிக்க வேண்டியிருந்தது. இதுபோன்ற உதாரணங்களை உலகின் பல நாடுகளில் காணலாம்.

நான் நாட்டைப் பொறுப்பேற்ற ஆரம்ப கட்டத்தில், நாட்டில் பணவீக்கம் 70 சதவீதத்தைத் தாண்டியது. கடந்த ஒக்டோபர் மாதத்திற்குள், அதை 1.5 சதவீதமாகக் குறைக்க முடிந்தது. நமது திறைசேரிப் பத்திர வட்டி வீதம் (Treasury Bills) 30 சதவீதத்தில் இருந்து 13 சதவீதமாககுறைந்துள்ளது. ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியடையாமல் பாதுகாத்துஓரளவுஸ்திரத்தன்மைக்கு அதனைக்கொண்டுவந்தோம். நான் நாட்டைப் பொறுப்பேற்ற போது, ரூபாயின் பெறுமதி வீழ்ச்சி 80 சதவீதம் வரை அதிகரித்திருந்தது. ஒரு டொலருக்கு 360 ரூபா வரை ரூபாவின் பெறுமதி குறைந்தது. இப்போது ஒரு டொலருக்கு 325 - 330 ரூபா என்ற அளவில் நிலைபெற்றுள்ளது. பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் லெபனான் இன்னும் அந்நிய செலாவணிவிகிதத்தைநிலைப்படுத்த முடியாமல் தவிக்கின்றது.

நான் முன்பே கூறியது போல், நாட்டின் பெரும்பான்மையான மக்களின் அர்ப்பணிப்பு மற்றும் கடின உழைப்பால், கயிற்றுப் பாலத்தை கடக்க முடிந்தது. கயிற்றுப் பாலம் எனும்போது ஹென்றி ஜெயசேனவின் 'ஹூனுவடயே கதை' தான் நம் நாட்டில் பெரும்பாலானோருக்குநினைவுக்கு வருகிறது. அந்தநாடகத்தில்வருகின்ற கயிற்றுப் பாலத்தின் பாடலைப் பாடும் குருஷா 'எங்களுக்கு வேறு வழியில்லை, மகனே' இந்த வழியில், செல்வோம் மகனே' என்று கூறுகிறார். இன்றும் நாம் அதனையே கூற வேண்டும். இந்த வழியைத் தவிர எங்களுக்கு வேறு வழியில்லை.

அன்றிலிருந்து இன்று வரை நான் இதே கதையைத்தான் கூறி வருகிறேன். இந்த வழியைத் தவிர எங்களுக்கு வேறு வழியில்லை. இந்தப் பாதையில் இரண்டு முக்கிய காரணிகள் உள்ளன. சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவது மற்றும் கடன் மறுசீரமைப்பு. அந்த இரண்டு காரணிகளையும்நாங்கள்சரியாகக் கையாண்டோம். அதனால் நல்ல பலன்களைப் பெற முடிந்தது. இந்தப் பாதையில் தொடர்ந்து பயணித்தால் நாம் அபிவிருத்தி அடைந்த நாடாக மாறலாம்.

இது ஒரு நீண்ட பயணம். ஓரிரண்டு நாட்களில் முடிக்கும் பயணம் அல்ல. 2048 வரை செல்லவேண்டியபயணம். ஆனால் நமக்கு இந்த வழியைத் தவிர வேறு வழியில்லை. நாம் வேறு வழியில் சென்றால், நமக்கு எதிர்காலம் இல்லை. நான் முன்பு சொன்ன இரண்டு முக்கிய காரணிகளை உடைத்தால், முழு நாடும் மீண்டும் வீழ்ச்சியடையும். மீண்டும் நாம் வங்குரோத்து நாடாக முத்திரை குத்தப்படுவோம்.

உதாரணத்திற்கு ஒன்றைக் குறிப்பிடுகிறேன். நமது நாட்டு ஆட்சியாளர்கள் குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக 11 ஆண்டுகளாக நீர்கட்டணத்தைஅதிகரிக்கவில்லை. பல ஆண்டுகளாக மின் கட்டணம் உயர்த்தப்படவில்லை. நீர்வழங்கல் சபை மற்றும் மின்சார சபையின் நட்டங்களை வெளிநாட்டுக் கடன்களைப் பெற்றுத்தான் பூர்த்தி செய்தனர். இந்த தவறை மீண்டும் எம்மால் செய்ய முடியாது.

அன்றாடச் செலவுகளுக்காக அன்றி, முதலீட்டிற்காகவே கடன் பெற வேண்டும். அவ்வாறு செய்யாமல் கடன் வாங்கி நுகர்வுக்குச் செலவழித்தால் வீழ்ச்சி அடைவோம் என்று புத்த பெருமான் உபதேசித்திருக்கிறார். எனவே, அந்தபழையதவறுகளைக் களைந்து, இந்தப்பாதையில் தொடர வேண்டும். புதிய கருத்தியல்களை நடைமுறைப்படுத்த வேண்டும். இந்த நாடாளுமன்றத்தின் அரச நிதிக்குழுவின் தலைவர் கலாநிதி ஹர்ஷ டி சில்வாவினால் நவம்பர் 20 நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

''2024ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டம், இலங்கை இதுவரை எதிர்கொண்ட மிக மோசமான பொருளாதார நெருக்கடியின் பின்னணியிலேயே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இறக்குமதிக் கட்டுப்பாடுகள், நாணய மதிப்பிழப்பு, செலவு-ப் பிரதிபலிப்பு பயன்பாட்டு விலை நிர்ணயம், புதிய வரி மற்றும் வரி விகிதங்கள் மற்றும் வைப்பு விகிதங்களைஉயர்த்துவதன்மூலம் நிதிக் கொள்கை இறுக்கம் உள்ளிட்ட கொள்கை நடவடிக்கைகள் ஓரளவு பொருளாதார ஸ்திரத்தன்மையைக் கொண்டு வந்தன". நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ குறிப்பிட்டது போல், தற்போது நாம் குறிப்பிட்ட அளவு பொருளாதார ஸ்திரத்தன்மையை அடைய முடிந்துள்ளது.

உண்மையைச்சொல்வதானால், சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தின் கீழ் நாம் செயல்படுத்தும் கொள்கைகள் 10 முதல்20ஆண்டுகளுக்குமுன்புநாம் செய்திருக்கவேண்டியவை. ஆனால் சில அரசியல் குழுக்கள் தேர்தல் வெற்றிகளை இலக்காகக் கொண்டு இவற்றைப் புறக்கணித்தன.

நான் பிரதமராக இருந்தபோது 2003இல் நிறைவேற்றப்பட்ட அரச நிதிமுகாமைத்துவப்பொறுப்புக்கூறல் சட்டத்தை பலர் புறக்கணித்தனர். பொருளாதார நோக்கங்கள் நசுக்கப்பட்டுஅரசியல்நோக்கங்கள் முன்னிலைப்படுத்தப்பட்டதால் அந்தச் சட்டம் 100% நடைமுறைப்படுத்தப்படவில்லை. அந்தத் தவறுகளுக்கானதண்டனையையே நாம் இப்போது அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் அரசியல்வாதிகள் தோற்றுவிக்கும் மாயைகள் தொடர்பில் முழு நாடும் கவனமாக செயற்பட வேண்டும். அவ்வாறான மாயைகளாக கூறப்படும் விடயங்களினால் நாம் மீண்டும் படுகுழியில் விழுவது மட்டுமன்றிவங்குரோத்துநிலைக்கும் செல்வோம்.

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது கடன் தொகைக்கு அனுமதி கிடைத்துள்ளமையோடு எமக்குபலநன்மைகள்கிட்டும். எமது நிதித்துறையில் பெரும் சக்தியாக அமையும் வகையில் வைப்பு காப்பீட்டுத் தொகையாக உலக வங்கி 150 மில்லியன் டொலர்களை வழங்கவுள்ளது. அதனால் வங்கி மற்றும் நிதித்துறைகள் 100 சதவீதம் பாதுகாக்கப்படும்.

அதேபோல் ஆசிய அபிவிருத்தி வங்கி, ஜெயிக்கா நிறுவனம் போன்ற நிதி நிறுவனங்களிடத்திலிருந்து அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக பெருந்தொகை பணம் எமக்கு கிடைக்கவுள்ளது. குறைந்த வட்டி மற்றும் சலுகை அடிப்படையிலான நிபந்தனைகளுடனேயே அந்த நிதி எமக்கு கிடைக்கவுள்ளது.

அதேபோல் தற்போது வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அச்சமின்றி இலங்கையில் முதலீடு செய்ய முடியும். எமது கடன் பத்திரங்களை மீண்டும் சர்வதேசம் ஏற்றுக்கொள்ளும். எமது சந்தைகளை மீண்டும் இலகுவாக விரிவுபடுத்த முடியும். சர்வதேச வரவேற்பைப் பெறுவதற்கான வாய்ப்பும் கிடைத்துள்ளது. இந்தச் சந்தர்ப்பதில் முழுமையாக பயனடைய வேண்டும். இவற்றினால் மாத்திரம்நாம்முழுமையானவெற்றி கண்டுவிட்டதாக எண்ணக்கூடாது. முழுமையான பொருளாதார சுதந்திரத்திற்காக நாம் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளது.

அதனால் நாம் இதுவரையில் பயணித்த சரியான பாதையை மூழ்கடிக்க முயற்சிக்க வேண்டாமெனக் கேட்டுக் கொள்கிறேன். சிலர் கதைகளை கூறி விமர்சனங்களை மாத்திரமே முன்வைக்கும் வேளையில் நான் செயற்பாட்டு ரீதியான பலன்களை காண்பித்துள்ளேன். உலகத்தினதும், இலங்கையிலும் பெரும்பான்மையான ஆதரவைப் பெற்று வெற்றிப் பாதைக்குள் கொண்டு சென்றுள்ளேன்.

ஹர்ச டி சில்வா அறிக்கையின் முக்கிய விடயமொன்றை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். "2023 செப்டெம்பரில் சர்வதேச நாணய நிதியத்தின் முதலாவது நீடிக்கப்பட்ட கடன் தொகை அனுமதிக்கப்பட்டதால் பொருளாதாரம்நிலைப்படுத்தப்பட்டுள்ளமை உறுதி செய்யப்படுள்ளது. ஓரளவு மகிழ்ச்சிக்குரிய விடயங்கள் நடந்திருந்தாலும், அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கிய நிலையான அபிவிருத்தியை ஏற்படுத்த நீண்ட பயணம் ஒன்று அவசியம்" எமக்கு நீண்ட தூரம் பயணம் உள்ளது என்பது உண்மையாகும். ஆனால்கயிற்றுப் பாலத்தை கடந்த பின்னர் சிறந்த பாதை உருவாகும். சரியான வழியில் செல்லத் தவறினால் திக்கற்று நிற்போம்.

இந்த பயணத்தில் இரு விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தவேண்டும். இதே வழியில் பயணிப்பது முதலவாது முறையாகும். கடந்தகாலதவறுகளை மீண்டும் செய்யாதிருத்தல் அடுத்த படிமுறையாகும். வங்குரோத்து நாடாக மாறியமைக்கான விடயங்களை மீண்டும் செய்யாதிருக்க வேண்டும்.

அதற்குதயார் எனில் எதிர்காலம் சிறக்கும். அதற்கு எவரும் தயாரில்லை எனில் நாட்டின் எதிர்காலம் ஆபத்தானதாக அமையும். இந்தப் பயணத்தில் நாம் அடைய வேண்டியபல இலக்குகள் உள்ளன. வெளிநாட்டு வருமானத்தின் இடைவெளியை குறைத்தல். வர்த்தக சமநிலையை பேணல், வரவு செலவு இடைவெளியை முடிந்த வரையில் குறைத்தல், வரவு செலவு திட்ட அடிப்படை கணக்குகளில் தன்னிறைவை ஏற்படுத்தல், நிதி ஒழுக்கத்தை வலுவாகப் பேணுதல் உள்ளிட்ட விடயங்களுக்காக நாம் புதிய பொருளாதாரத்தை கட்டமைக்க வேண்டும்.

புதிய உலகின் சவால்களுக்கு ஈடுகொடுக்கூடிய பொருளாதாரம், வலுவான டிஜிட்டல் மற்றும் பசுமை பொருளாதாரம் என்பவற்றை உருவாக்கினால் புதிய தொழில் மற்றும் வருமான வழிமுறைகளையும் நாம் ஏற்படுத்திக்கொள்ள முடியும். முதலீடுகளை அதிகளவில் இலங்கைக்குள் கொண்டுவரவும் முடியும். வரிச்சுமையை படிப்படியாக குறைக்கும் இயலுமையும் கிட்டும்.

வற் வரி உள்ளிட்ட வரிகளால் சமூகத்திற்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளமைதெரிகிறது. விருப்பத்துடன் நாம் வரி விதிக்கவில்லை. மாற்று வழிகள் எவையும் இல்லாமையே வரி விதிப்புக்குக் காரணமாகும். அது கடினமான தீர்மானமாகும். நாட்டின் எதிர்காலத்திற்காக அதனை மேற்கொள்ள வேண்டியிருந்தது. பொருளாதாரம்வலுவடையும்போது மக்களுக்குத் தேவையான சலுகைகளை வழங்கவும் எம்மால் முடியும்.

அதேபோல் எமது வரிச் சட்டத்தில் பல்வேறு குறைப்பாடுகள் காணப்படுகின்றன. நான் வரவு செலவு திட்ட உரையில் குறிப்பிட்டிருந்ததை போல, பலர் ஆவணங்களைப் பதிவு செய்வதில் தயக்கம் காட்டுகின்றனர். அவர்கள் பல நெருக்கடிகளுக்கு முகம் கொடுப்பதே அதற்குக்காரணமாகும். அந்த நிலைமையை நாம் மாற்றுவோம். வரிப் பத்திரமுள்ள பிரஜைகளை நசுக்கும் திட்டத்திற்கு மாறாக அவர்களை மதிக்கும் முறைமையொன்றை நாம் ஏற்படுத்துவோம்.

வரிச் சட்டத்தில் காணப்படும் இடைவெளிகள் காரணமாக பல வருடகாலமாக வரி செலுத்தாமல் இருப்பதற்கான வழி ஏற்பட்டுள்ளது.

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# ஜோசப் பரராஜசிங்கம், ரவிராஜ், மகேஸ்வரன் கொலைகள் குறித்தும் விசாரணை நடத்துங்கள்

## சஜித் பிரேமதாஸ ஆளும் தரப்பிடம் வலியுறுத்து

பிரிட்டிஷ் ஆட்சியில் படுகொலை செய்யப்பட்ட எட்வர்ட் ஹென்றி பேதிரிஸ் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள மூவரடங்கிய குழுவை நியமித்தது போன்று தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சிங்களப் பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டமை குறித்தும் விசாரிக்க குழுக்களை நியமிக்கவேண்டும் என்று நாடாளுமன்றத்தில் வலியுறுத்தினார் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

நாடாளுமன்றத்தில் நேற்று ஆற்றிய உரையின்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவத்தால் படுகொலை செய்யப்பட்டவர்கள், சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க, ரிச்சட் சொய்சா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், ரவிராஜ், மகேஸ்வரன் படுகொலை மற்றும் சாகரிகா கோமஸ், பிரேம கீர்த்தி அல்விஸ் ஆகியோர் படுகொலைகள் தொடர்பிலும் விசாரணைகளை மேற்கொண்டு உண்மைகள் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்.

பிரிட்டிஷார் ஆட்சியில் படுகொலை செய்யப்பட்ட எட்வர்ட் ஹென்றி தொடர்பில் காட்டும் அக்கறை அண்மை காலத்தில் படுகொலை செய்யப்பட்டவர்கள் விவகாரத்திலும் இந்த ஆட்சியாளர்கள் செலுத்த வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

# கிரிக்கெட் சபையை கலைக்க முடியாது

## அமைச்சர் ஹரின் திட்டவட்டம்



நாடாளுமன்றில் வெளியிடப்படும் எதிர்ப்புக்களை அடிப்படையாகக் கொண்டு, இலங்கை கிரிக்கெட் சபையை கலைக்க முடியாது என விளையாட்டுத்துறைஅமைச்சர்ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இலங்கை கிரிக்கெட் சபை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ –

225நாடாளுமன்றஉறுப்பினர்கள் மட்டுமன்றி, ஒட்டுமொத்த கிரிக்கெட் ரசிகர்களின் வேண்டுகோளுக்கு இணங்கஇலங்கைகிரிக்கெட்சபையை உடனடியாக கலைக்க வேண்டும். – என வலியுறுத்தியிருந்தார்.

இந்நிலையில் சஜித் பிரேமதாஸ தெரிவித்த கருத்துக்கு பதிலளித்து உரையாற்றிய போதே ஹரீன் பெர்னான்டோ மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்துஹரீன்பெர்னாண்டோ மேலும் தெரிவிக்கையில் –

ஐ.சி.சி. தற்போது இலங்கை கிரிக்கெட் அணியை தடை செய்–துள்ளது. இதனை விலக்கிக்கொள்ள நாம் அவர்களுடன் பேச்சு நடத்தி வருகிறோம்.

இந்தநிலையில், பிரபலமாவதற்காக கிரிக்கெட்டில் ஊழல் உள்ளதாக கூச்சலிட்டுக்கொண்டிருப்பதால், இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடப்போவதில்லை.

இங்கு நாடாளுமன்றில் கூறும்கருத்துக்களைஐ.சி.சி. ஏற்றும் கொள்ளாது.

இதனைப் புரிந்துக் கொள்ளாத எதிர்க்கட்சித் தலைவர் ஒருவர் இங்கே இருப்பதை நினைத்து நான் கவலையடைகிறேன்.

நாட்டில் நடைபெறவிருந்த 19 வயதுக்குட்பட்டவர்களுக்கான உலகக் கிண்ணத் தொடர்தான் இல்லாது போயுள்ளது.

கிரிக்கெட் சபையில் பல பிரச்சினைகள் உள்ளன. நான் கடந்த காலத்தில் விளையாட்டுத் துறை அமைச்சராகஇருந்தபோதும்கூட, இடைக்கால நிர்வாக சபையொன்றை அமைக்க 3,4 தடவைகள் முயற்சித்தேன்.

ஆனால், ஐ.சி.சி. இதற்கு எதிர்ப்பை வெளியிட்டது. இந்த நிலையில், நாம் சித்திரஸ்ரீ அறிக்கைக்கு இணங்க விளையாட்டுச் சட்டத்தை முதலில் மாற்றியமைக்க வேண்டும். – இவ்வாறு ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (05)

## வவுனியா பாடசாலைகளின் கதவுகள் உடைத்து திருட்டு

வவுனியா, சாளம்பைக்குளம் பகுதியில்உள்ளஇரு பாடசாலைகளின் கதவுகள் உடைக்கப்பட்டு மோட்டார்கள், மின் விசிகள் உள்ளிட்ட பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்தசம்பவம் தொடர்பில்பூவரன் குளம் பொலிஸ் நிலையத்தில் பாடசாலை நிர்வாகத்தால் முறைப்பாடளிக்கப்பட்டுள்ளதாகவும், இது குறித்த விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(05)

## பாடசாலைகளின் தேவைக்கு குப்பை வாழிகள் அன்பளிப்பு



சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306 பி1 இன் மாவட்ட ஆளுநர் லயன் பிளஸிடஸ் எம் பீற்றர் அவர்களால் டிசெம்;பர் மாதம் 4 ஆம் திகதி முதல் டெங்கு விழிப்புணர்வு மாதமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த வகையில் சுன்னாகம் லயன்ஸ் கழகத்தால் டெங்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கு வலிகாமம் கல்வி வலயத்தில் உள்ள ஒவ்வொரு பாடசாலைகளிலும் நடைபெற்று வருகின்றது.

இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்கை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பொதுச்சுகாதாரப் பரிசோதகர் சி.கார்த்தீபன், அஜந்தன் ஆகியோர் நிகழ்த்தி வருகின்றனர்.

அவர்களின் இந்தச் செயற்பாட்டின் மேலும் ஒரு பகுதியாக வலிகாமம் வலயத்திலுள்ள தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளுக்கு கழிவுகளைத் தரம் பிரித்து இடுவதற்கு மூன்று வெவ்வேறு வர்ணங்களைக் கொண்ட குப்பை வாளிகள் வழங்கப்பட்டன.

அதன் ஒரு செயற்பாடாக மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியின் அதிபரிடம் சுன்னாகம் லயன்ஸ் கழக உறுப்பினர் ச.விஜிந்தனின்அனுசரணையில்மூன்றுகுப்பை வாளிகள் வழங்கிவைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சுன்னாகம் லயன்ஸ் கழகச் செயலாளர் லயன் சி.ஹரிகரன், பிராந்தியத் தலைவர் லயன்பா.மரியதாஸ், வலயத்தலைவர் லயன் க.டினேஸ், மாவட்டத்தலைவர் லயன் தே.அகிலன், பொதுச்சுகாதாரப் பரிசோதகர் அஜந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர். (05)

## பூநகரி சூரிய மின் உற்பத்தி திட்டம் மூலம் கிடைக்கும் மின்சாரத்தின் விலை என்ன?

### சபையில் அனுரகுமார கேள்வி



கிளிநொச்சி பூநகரி குளத்தில் சூரியமின்சக்திஉற்பத்தியைமேற் கொள்ளவது குறித்து முழுமையான விளக்கத்தை மக்களுக்கு வழங்க வேண்டுமென தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

'கிளிநொச்சி பூநகரி குளத்திலிருந்து 700 மெகாவொட் சூரிய மின்சக்தி உற்பத்தியை மேற்கொள்ள அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இந்த மின் உற்பத்தியை மேற்கொண்டு நமக்கு மின்சாரம் வழங்குவதற்காக நாம் மின்சார கொள்முதல்ஒப்பந்தம் ஒன்றைக் கைச்சாத்திட வேண்டும். இவ்வாறு அவர்கள் உற்பத்தி செய்யும் மின்சாரத்தை நாம் கொள்வனவு செய்வதற்காக மேற்கொள்ளப்படும் ஒப்பந்தத்தின் பெறுமதி எவ்வளவு என்பதை அறிந்துகொள்ளவிரும்புகின்றேன்.

இந்த ஒப்பந்தத்திற்கு அமைவாக ஓர் அலகு மின்சாரத்தின் பெறுமதி 50 ரூபாவாகும்.

சூரியமின்உற்பத்திநாட்டில்அதிகாரித்தால்மின்சாரக்கட்டணங்கள் குறைவடையும் என்ற பெரும் எதிர்பார்ப்பு ஒன்று நம் நாட்டு மக்களுக்கு இருக்கின்றது.

ஆகவே இது தொடர்பில் தெளிவுபடுத்துங்கள். அதேநேரம் இவற்றுக்கு வெளிப்படையான விலைமனுக்கோரல்கள் முன்வைக்கப்படுவதில்லை.

அனைத்தும் மறைவாகவே முன்னெடுக்கப்படுகின்றன என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)

## மட்டு இராணுவ முகாம்களை அகற்றுங்கள்

### இரா. சாணக்கியன் வலியுறுத்தல்

மட்டக்களப்பிலுள்ளஇராணுவ முகாங்களை அகற்றுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் அவர்களே குருக்கள்மட இராணுவ முகாம் பற்றி நாம் மாவட்ட மட்டத்தில் கலந்துரையாடி அதில் ஒரு பகுதி அளவில் விட்டுத் தருவதாக உறுதி அளித்துள்ளார்கள். அதனை நீங்கள் துரிதப்படுத்தித் தரவேண்டும்.

அதே போல் மட்டக்களப்பு மாவட்டத்தில் காயன்கேணி பிரதேசத்தில் புதிதாக ஒரு காணியை இராணுவம் தன் வசப்படுத்தும் திட்டம் உள்ளதாக அறிந்தோம். அதே போல் பாலையடி வெட்டை இராணுவ முகாமில் ஒரு பகுதியை அவ் ஊர் மக்கள்மலசலம்அமைப்பதக்காகக் கேட்கின்றார்கள்.

இவற்றையும் கருத்தில் கொண்டு இவற்றுக்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மட்டக்களப்பில் இவ்வாறாக பல காணிகள் காணப்படுகின்றன. இவற்றை விடுவிக்க ஜனாதிபதியிடம் பல கோரிக்கைகள் முன்வைத்துள்ளேன் அவற்றை உங்களிடமும் முன்வைக்கின்றேன்.

நீங்கள் இராஜாங்க அமைச்சராக இருக்கும் காலப்பகுதிக்குள் இந்தக் காணிகளை மக்களுக்குகையளிக்கக்கூடியதாக மற்றும் விடுவிக்கக் கூடிய வகையில் காணப்படும் என்பதை உங்களிடம்நான்கோரிக்கையாக முன்வைக்கின்றேன். –இவ்வாறு தெரிவித்துள்ளார். (05)

## 'கெத்சமனே கொஸ்பல் சபையில்' நத்தார் தினக் கொண்டாட்டம்!





நத்தார் தினத்தை முன்னிட்டு, கொழும்பு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட கிறிஸ்தவ மதப் போதகர்களுக்கு அப்பளிப்பு வழங்கும் நிகழ்வு அண்மையில் கொழும்பு, மட்டக்குளியில் உள்ள கெத்சமனேகொஸ்பல்சபையில்நடைபெற்றது.

ஜனனம் அறக்கட்டளையின் ஸ்தாபகத் தலைவர் கலாநிதி விநாயகமூர்த்தி ஜனகனின் ஆலோசனைக்கு அமைவாக இந் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் ஜனனம் அறக்கட்டளையின் பணிப்பாளரும் அகில இலங்கை கிறிஸ்தவ ஒன்றியத்தின் தலைவர் அருட்கலாநிதி வணபிதா சந்ரு பெர்னாண்டோ சிறப்பு அதிதியாக கலந்துகொண்டு, வருகை தந்திருந்த கிறிஸ்தவ மதப்போதகர்களுக்கு அன்பளிப்பு வவுச்சர்களை வழங்கி வைத்தார். (05)

## இலங்கையுடனான தமது உறவுகளை மேம்படுத்த சிங்கப்பூர் பிரதமர் ஆர்வம்



இலங்கைக்கும் சிங்கப்பூருக்கும் இடையிலான உறவை மேலும் வலுப்படுத்து–வதற்கான சாத்தியம் குறித்து வலியுறுத்தி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு பிரதமர் லீ சியன் லூங் கடிதம் எழுதியுள்ளார்.

இரு நாடுகளுக்கு–மிடையிலான இராஜதந்திர உறவுகளை மேம்படுத்தும் வகையில் எதிர்காலத்தில் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் அரசியல், பொருளாதாரம் மற் றும் மக்களிடையேயான உறவுகளை மேம் படுத்துவதில் சிங்கப்பூர் பிரதமர்தனதுஅர்ப்பணிப்பை வெளிப்படுத்தியுள்ளார்.

ஜனாதிபதிரணில்விக்ரம சிங்கநாட்டைமுன்னேற்றும் நடவடிக்கையில் வெற்றி பெறுவார் என்றும் சிங்கப்பூர் பிரதமர் லீ சியன் லூங் நம்பிக்கை வெளியுள்ளார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## யதார்த்த உண்மை

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எதிர்க் கட்சியைச் சேர்ந்த பொருளாதார நிபுணர் ஹர்ஷ டி சில்வாவின் அறிக்கையைப் பல தடவைகள் மேற்கோள் காட்டிப் பேசினார். எதிர்த் தரப்பைச் சேர்ந்தவர்களும் தனது பொருளாதாரச் சீரமைப்பு நடவடிக்கைகளைப் பாராட்டியிருக்கிறார்கள் என்பதை மறைமுகமாக எடுத்துக்காட்டுவதாகவே அவரது உரைய அமைந்தது. அதாவது எதிர்க் கட்சியினர்கூடப் பாராட்டும் வகையில் பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகளைத் தான் எடுத்துள்ளார் என்று அவர் மக்களைத் தனது உரையின் மூலம் நம்ப வைக்க முயல்கின்றார்.

அதில் வேடிக்கை என்னவென்றால் அரசுத் தலைவர் மேற்கோள் காட்டிய ஹர்ஷ டி சில்வாவோ ரணிலின் பொருளாதார நடவடிக்கைகள் குறித்து வேறு ஒரு பரிமாணத்தையேதெளிவுபடுத்துகின்றார். அரசுத்தலைவரின் பொருளாதார மீட்சி திட்டங்கள் 'சத்திரசிகிச்சை வெற்றி ஆனால் நோயாளி சாவு' என்பதற்கு ஒப்பானது என்கிறார். அதுமட்டுமல்ல கண்கட்டி வித்தையால் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண முடியாது என்பதை அரசுத் தலைவர் விளங்கிக் கொள்ள வேண்டும் எனவும் ஹர்ஷ கண்டித்திருக்கிறார்.

''அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அவரது இறுதி வரவு செலவுத் திட்ட உரையை நாடாளுமன்றத்தில் முன்வைத்தபோது நான் குறிப்பிட்ட விடயங்களை சுட்டிக்காட்டி உரையாற்றியதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். நாடு தற்போது சற்று ஸ்திரநிலையடைந்துள்ளது என்று ஜனாதிபதி குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்கிறேன்.

நாட்டில் தற்போது எரிபொருள், எரிவாயுவுக்கான வரிசை இல்லை. ஆனால் மக்களின் வாழ்க்கை தரம் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடிக்கு முன்னரான காலப்பகுதியில் நான்கு பேர் உள்ள ஒரு குடும்பத்தின் மாத செலவு 85 ஆயிரம் ரூபாவாக காணப்பட்டது. ஆனால் தற்போது அந்த தொகை 1 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாவாக உயர்வடைந்துள்ளது. மக்களின் வாழ்க்கை செலவுகள் 95 சதவீதமளவில் உயர்வடைந்துள்ள பின்னணியில் தான் நாடு சற்று இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது என்பதை அரசுத் தலைவர் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள வரியை மக்களால் தாங்கிக் கொள்ள முடியாது என்பதை அரசுத் தலைவர் ஏற்றுக்கொள்வதில்லை. மக்களாலே நாடு வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்டது போன்ற நிலைப்பாட்டில் இருந்து கொண்டு ஜனாதிபதி பேசுகிறார். இலங்கை வங்குரோத்து நிலையில் இருந்து மீண்டு விட்டதா, இல்லையா என்பதை உலகமே தீர்மானிக்கும், எம்மால் தீர்மானிக்க முடியாது.

விவசாயத்துறையின் வீழ்ச்சியை தொடர்ந்து நாடு பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டது. விவசாயத்துறையை மேம்படுத்த எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. வற் வரியில் உழவு இயந்திரம் முதல் மண்வெட்டி வரையிலான சகல பொருட்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. வரி அதிகரிப்பதை மாத்திரமே ஆளும் தரப்புத் தனது பொருளாதார கொள்கையாக கொண்டுள்ளது.

2048 ஆம் ஆண்டு பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைவதாக ஜனாதிபதி குறிப்பிடுகிறார். அவ்வாறாயின் பொருளாதார வளர்ச்சி வருடாந்தம் 7 சதவீதத்தால் உயர்வடைய வேண்டும். ஆனால் அடுத்த ஆண்டு பொருளாதார வளர்ச்சி 1.8 சதவீதத்தாலும், 2025 ஆம் ஆண்டு 2.7 சதவீதத்தாலும், 2026 ஆம் ஆண்டு 3 சதவீதத்தாலும், 2027 ஆம் ஆண்டு 3.1 சதவீதத்தாலும் அதிகரிக்க கூடும் என்பதே ஆளும் தரப்பின் எதிர்பார்பபு. இவ்வாறான நிலையில் 2048 ஆம் ஆண்டு பொருளாதார முன்னேற்றம் என்பது சாத்தியமற்றது. அத்துடன் கண்கட்டி வித்தையால் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண முடியாது" என்கிறார் ஹர்ஷ டி சில்வா.

ஹர்ஷவின் அறிக்கையை ஏற்றுக்கொண்டு அதனைத் தனது உரையில் மேற்கோள்காட்டிய அரசுத் தலைவர் அவரது இந்தக் கருத்தையும் ஏற்றுக்கொண்டுதானே ஆகவேண்டும். அப்படிப் பார்த்தார் ஹர்ஷ சொல்லும் அரசுத் தலைவரின் பொருளாதாரக் கொள்கையயால் எதிர்காலப் பயன்கள் என்பது மிக மிகக் குறைவு என்பதுதானே பொருள்.



# பூமி நமக்கு மட்டும் சொந்தமானதல்ல

**நிவேதன்**



சூரிய குடும்பத்தில் பல்வேறு கிரகங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் உயிரினங்கள் வாழத் தகுதியான ஒரே ஒரு கிரகம் இந்த புவி ஆகும். நாம் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய தற்கால சூழ்நிலையில் புவியானது எம்முடைய செயற்பாடுகளினால் அழிவின் விளிம்பில் நின்று கொண்டிருக்கின்றது.

இந்த புவி நமக்கு மட்டும் சொந்தமானதல்ல வரக்கூடிய வருங்கால சந்ததிகளுக்கும், பிற உயிர்களுக்கும் சொந்தமானது என்பதனை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

பூமியில் உள்ள ஒவ்வொரு இயற்கை வளங்களுக்கும், உயிரிகளுக்கும் இடையிலான தொடர்பு மிகவும் பின்னிப் பிணைந்ததாகவே காணப்படுகின்றது.

அந்த வகையில் பூமி மனிதர்களுக்கு சொந்தமானது



மட்டுமல்ல இந்த மனிதர்கள் தான் பூமிக்கு சொந்தமானவர்கள் என கூற முடியும்.

அதாவது ஒரு மனிதன் பிறந்து ஏதோ ஒரு வகையில் வாழ்ந்து மறுபடியும் இறந்து விடுகின்றான். அவனுடைய வாழ்க்கை நிச்சயம் அற்றதாகவே காணப்படுகின்றது.

ஆனால் வருங்கால சந்ததிகளும் வாழும் வாழிடமாக இந்த பூமி காணப்படுகின்றது. ஆகவே பூமிக்கு சொந்தமானவர்கள் நாமே தவிர எமக்கு மட்டுமே பூமி சொந்தம் கிடையாது என கூற முடியும்.

விண்வெளியில் கோள் மண்டலத்தில் பல்வேறு கோள்கள் காணப்படுகின்றன. ஆனால் அவை யாவற்றிலும் இருந்து சிறப்பு வாய்ந்ததாகவும் தனித்துவமானதாகவும் உள்ள ஓர் கோளாக பூமி காணப்படுகின்றது.

அதாவது உயிர்கள் வாழ்வதற்கு உகந்த நீர், வளி, காலநிலை போன்றவற்றை கொண்டிருக்கக்கூடிய ஒரே ஒரு கோளாக இந்த பூமியே காணப்படுகின்றது. ஆகவே இந்த பூமிக்கு சொந்தமான நாம் அதன் முக்கியத்துவத்தை விளங்கிக் கொள்வது அவசியமாகும்.

20ஆம் நூற்றாண்டுகளின் பிற்பாடே பூமி அதிகமாக மாசடைந்து, பாதிப்புக்கு உள்ளாகியுள்ளமையைக் காணலாம். பிளாஸ்டிக் பொருட்களின் அதீத பாவனை, வன உயிரிகளை வேட்டையாடுதல், காடுகளை அழித்தல், தொழிற்சாலைக் கழிவுகளை நீர் நிலைகளில் கலக்க விடுதல் மற்றும் பொலித்தீன் பாவனை, வாகனப் புகை போன்ற பல்வேறு காரணிகளின் மூலம் இந்த பூமி மாசடைந்து பாதிப்புக்கு உள்ளாகுவதோடு இவ்வாறான செயற்பாடுகளின் மூலம் பூகம்பம், சுனாமி, மண் சரிவு, வறட்சி போன்ற இயற்கை பேரிடர்கள் ஏற்பட்டு பூமி அதிகமாக பாதிப்புக்கு உள்ளாகுவதனையும் காணமுடியும்.

மனிதன் பூமிக்கு சொந்தமானவன் என்ற வகையில் அந்தப் பூமியைப் பாதுகாப்பதில் முக்கிய பங்காற்ற வேண்டிய தேவை காணப்படுகின்றது. அதன் அடிப்படையில் நாம் வாழக்கூடிய பூமிக்கு நாம் ஏற்படுத்திய தீய விளைவுகளைச் சரி செய்யும் வகையில் கைகோர்த்து செயற்பட வேண்டிய தேவை காணப்படுகின்றது.

வனங்களையும் வன விலங்குகளையும் பாதுகாப்பதோடு, நீரை சிக்கனமாக பயன்படுத்துதல், மீழ் சுழற்சிக்கு பொருட்களை உட்படுத்துதல், சுற்றுச் சூழல் தூய்மையைப் பேணுதல் மற்றும் பண்பாட்டு கலாசார முக்கியத்துவத்தைப் பாதுகாத்து வருங்கால சந்ததியினருக்குக் கடத்துதல் போன்றவாரான எமது செயற்பாடுகளின் மூலம் நாம் வாழக்கூடிய பூமியின் தூய்மையை பாதுகாக்க முடியும்.

இன்று மனிதன் தன்னுடைய ஆய்வுகளின் பலனாக பல்வேறு கிரகங்களுக்குச் சென்று வருகின்றான். ஆனால் எந்தக் கிரகத்திலும் நிரந்தரமாக சென்று தங்குவதற்கான ஏற்பாடுகள் இல்லை.

மனிதன் ஏதோ ஒரு வகையில் இந்தப் பூவுலகில் பிறந்து, இங்கேயே வாழ்ந்து, இங்கேயே இறப்பதற்கு நிர்பந்திக்கப்பட்டுள்ளான். ஆகவே பூமிக்கும் மனிதனுக்கும் இடையிலான தொடர்பு இங்கு பின்னிப்பிணைந்துள்ளதாகவே காணப்படுகின்றது.

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்தப் பூமியானது பல்வேறு இயற்கையான அருட்கொடைகளையும், பல்வேறு உயிரிகளையும் கொண்டு காணப்படுகின்றது. இங்கு காணப்படக்கூடிய பல்வேறு உயிர்களுள் நாமும் ஓர் உயிரி வர்க்கமாகவே காணப்படுகின்றோம். இந்த பூமி எமக்கு மட்டும் சொந்தமானது அல்ல. இந்த பூமிக்கு தான் நாம் சொந்தமானவர்கள் என்பதனை முதலில் நாம் தெளிவாக உணர்ந்து கொள்வதோடு இந்த பூவுலகின் தூய்மையை பாதுகாக்கும் வகையிலும் செயல்படுவது எமது கடமையாகும்.



# தமிழ் அரசுக்கட்சி குறித்து வெளிவரும் செய்திகள் உண்மைக்கு புறம்பானவை

## கல்முனை வட்டாரக்கிளை உறுப்பினர்கள் கருத்து



அண்மைக் காலமாக ஊடகங்களில் தமிழரசுக் கட்சி தொடர்பாக வெளிவரும் செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை என இலங்கை தமிழரசுக் கட்சியின் கல்முனை வட்டாரக்கிளை உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை பகுதியில் அமைந்துள்ள தமிழரசுக்கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடவியலாளர் சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

இது குறித்து கல்முனை தமிழரசுக்கட்சி தொகுதிக்கிளையின் தலைவர் நிதான்சன், செயலாளர் மற்றும் உப செயலாளர் ஆகியோர் கருத்துத் தெரிவிக்கையில் -

அண்மையில் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டம் தொடர்பில் முன்னுக்கு பின் முரண்பாடான செய்திகள் கல்முனை தமிழரசு கட்சி தொகுதி குறித்து வெளியாகி வருகின்றன.

எமது கிளைக்குள் எந்தவொரு முரண்பாடுகளும் இல்லை. அத்துடன் கட்சி கட்டமைப்பு அதன் வளர்ச்சி தொடர்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கூட்டத்தில் பல தீர்மானங்களை எடுத்திருந்தோம்.ஆனால் தற்போது சூடுபிடித்துள்ள கட்சி தலைமை குறித்து இக்கூட்டத்தில் ஆராயப்பட்டவில்லை என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றோம்'இவ்வாறு தெரிவித்துள்ளனர்.(05)

## இயந்திர தகடுகளைத் திருடிய குற்றச்சாட்டில் பூசகர் கைது



யாழ். ஊர்காவற்றுறையில் அமைந்துள்ள ஐயனார் ஆலயத்தின் விக்கிரகங்களின் கீழிருந்த இயந்திரத் தகடுகளைத் திருடி விற்று வந்த குற்றச்சாட்டில் பூசகர் ஒருவர்

பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த பூசகர் கடந்த நவம்பர் மாதம் 26 ஆம் திகதி ஆலயத்தின் பூசகராக நியமிக்கப்பட்டுள்ள நிலையில், சந்தேகம் ஏற்படாதவாறு, விக்கிரகங்களை இருப்பிடத்தில் இருந்து மாற்றி இயந்திரத்தகடுகளைத் திருடி வந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அவரால் திருடப்பட்ட இயந்திரதடுகள் சுமார் 10 பவுண் பெறுமதியானவை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

## ஜெரோம் பெர்னாண்டோவின் விளக்கமறியல் மேலும் நீடிப்பு



போதகர் ஜெரோம் பெர்னாண்டோவை எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை நீதிவான் திலின கமகே உத்தரவிட்டுள்ளார்.

கோட்டை நீதிவான் முன்னிலையில் அவர் மீண்டும் முன்னிலைப்படுத்தப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைவாக குற்றப்புலனாய்வுப்பிரிவில் இரண்டாவது நாளாக முன்னிலையாகிய போது போதகர் ஜெரோம் பெர்னாண்டோ கைது செய்யப்பட்டார்.

மதங்களை இழிவுப்படுத்தும் வகையில் கருத்துரைத்தார் எனக் குற்றம் சாட்டப்பட்ட ஜெரோம் பெர்னாண்டோ, வெளிநாட்டு தடை விதிக்கப்படுவதற்கு இரண்டு நாள்களுக்கு முன்னர் சிங்கப்பூருக்கு சென்றிருந்தார்.

அவரது கருத்துக்கள் தொடர்பாக பல மாதங்களாக சர்ச்சை தொடர்ந்த நிலையில் கடந்த மாதம் 29 ஆம் திகதி அவர் நாடு திரும்பினார்.

இதனை தொடர்ந்து வாக்குமூலம் வழங்குவதற்காக குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகி இருந்த நிலையில், அவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார். (05)


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்

(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சநேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி

முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை

தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு

மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி

உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்

தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்

சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-

பரப்பு 20 இலட்சம்




இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee
Chikne Fried Rice with
Vegetable
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup
Fruit Salad
Ice Cream & Fruit Salad
Cream Caramel
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml
Milk Drink
Cocacola M
Pepsi M
Swehpees Tin
Coca Cola Tin

# பறந்துகொண்டிருந்த விமானத்தில் இலங்கை சிறுமி மீது துஷ்பிரயோகம்

## 49 வயதான இந்திய பிரஜை கைது

விமானத்தில் வைத்து இலங்கையை சேர்ந்த சிறுமியை பாலியல்துஷ்பிரயோகம்செய்ததாக குற்றம்சாட்டப்பட்ட இந்திய பிரஜை கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் 49 வயதுடைய இந்தியப் பிரஜையாவார்.

பாதிக்கப்பட்ட சிறுமி இலங்கையை சேர்ந்த 8 வயதுடையவராவார்.

நேற்று (புதன்கிழமை) சவுதி அரேபியாவிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானத்திலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பாதிக்கப்பட்ட சிறுமியின் தாய் விமானபணியாளர்களிடம்விடுத்த முறைப்பாட்டின் அடிப்படையில் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் குறித்த விமானத்திலிருந்து கட்டுநாயக்கவை வந்தடைந்து மீண்டும் இந்தியாவை நோக்கி புறப்படவிருந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுமி பரிசோதனைக்காக விமான நிலைய பொலிஸாரால் நீர்கொழும்பு பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர்கொழும்பு கோட்டை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.(05)

# கந்தகாடு கைதிகள் விவகாரம்: விசாரணைக்குக் குழு நியமிப்பு

'வெலிகந்த -கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகள் தப்பியோடிய சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள ஐவரடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக' புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் தர்ன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

அத்துடன்' குறித்த சம்பவம் தொடர்பில் 3 நாள்களுக்குள் விசாரணை மேற்கொண்டுதன்னிடம் அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறும் குறித்த குழுவுக்கு உத்தரவிட்டுள்ளதாக' அவர் தெரிவித்துள்ளார். (05)

# 3 வயது சிறுமியின் கையில் தீயால்சுட்ட சித்தப்பா முறையான சிப்பாய் கைது

பொலன்னறுவை-தியபெதும பிரதேசத்தில் மூன்று வயது சிறுமியின் கையில் தீயால் சூடுவைத்த குற்றச்சாட்டில் இராணுவ சிப்பாய் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் சிறுமியின் தந்தையின் இளைய சகோதரனாவார்.

பாதிக்கப்பட்ட சிறுமியின் தாய் பொலிஸாருக்கு வழங்கிய முறைப்பாட்டின் பேரில் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசாரணையில் இவர் குறித்த சிறுமி செய்த தவறொன்றிற்காக கையில் தீயால் சூடுவைத்து சிறுமியை அச்சுறுத்த முயற்பட்ட போது சிறுமியின் கை தீயில் பட்டதில் சிறுமி காயமடைந்துள்ளார் எனப் பொலிஸாருக்கு தெரிவித்துள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் புதன்கிழமை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# மருமகன் தாக்கியதில் மாமனார் உயிரிழப்பு

மருமகனின் தாக்குதலுக்கு இலக்கான நபர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் யாழில் இடம்பெற்றுள்ளது. யாழ்ப்பாணம் வதிரி, கரவெட்டி - நெல்லியடி பகுதியைச் சேர்ந்த 50 வயதான நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 9ஆம் திகதி குறித்த நபர் தனிமையில் தனது வீட்டில் இருந்துள்ளார் எனவும், இதன்போது மதுபோதையில் அங்கு வந்த மருமகன் (அக்காவின் மகன்)அவரைத் தாக்கியுள்ளார் எனவும் கூறப்படுகின்றது.

இந்நிலையில் படுகாயமடைந்த குறித்த நபர் யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதேவேளை தாக்குதலை மேற்கொண்டவர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் மந்திகை பகுதியில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.(05)

# வாளுடன் ஒருவர் புத்தூரில் கைது

புத்தூர் சந்தியில் வாளுடன் நின்ற ஆவரங்கால் பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞன், செவ்வாய்க்கிழமை இரவுகாங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸார் திருட்டுச் சம்பவம் ஒன்று தொடர்பான தேடுதல் நடவடிக்கைக்காக சென்றுகொண்டிருந்தவேளை குறித்த சந்தேகநபர் புத்தூர் சந்தியில்வாளுடன்நின்றுள்ளார். இதன்போது பொலிஸார் அவரைக் கைது செய்தனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (05)

# வீதியில் பயணித்த காரை வழிமறித்த பஸ் சாரதி மீது பாலியல் குற்றச்சாட்டு

*வீதியில் பயணித்த காரை வழிமறித்து காரிற்குள் இருந்த பெண்ணை பாலியல் துஷ்பிரயோகப்படுத்திய தனியார் பஸ் ஒன்றின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*கைதுசெய்யப்பட்டவர் இரத்தினபுரி - தன்னஹென பிரதேசத்தை சேர்ந்த பஸ் சாரதியாவார்.*

*பாதிக்கப்பட்ட பெண் தனது மகளுடன் காரில் பயணித்த போது வீதியில் வந்த பஸ் ஒன்று காரை செலுத்தவிடாமல் வழி மறித்துள்ளது.*

*இந்நிலையில் காரை செலுத்திய பெண் பஸ்ஸை காரில் முந்திச் செல்ல முற்பட்ட போது பஸ்சாரதியால் பாலியல்துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகியுள்ளார்.*

*இதையடுத்து கைதுசெய்யப்பட்ட பஸ் சாரதி நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்ட பின்னர் ஒரு லட்சம் ரூபா சரீர பிணையில் விடுதலைசெய்யநீதிமன்றம்உத்தரவிட்டுள்ளது.*

*(05)*



## நாணய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த நிலையை மாற்ற வேண்டும். வரி செலுத்துவோரை நாம் பாதுகாப்போம். வரி செலுத்தாதவர்களை சட்டத்தின் முன்பாக நிறுத்துவோம்.

புதிய பொருளாதாரத்தின் வாயிலாக மாத்திரமே இவ்வாறான நடைமுறை மாற்றங்களை ஏற்படுத்த முடியும். சமயோசிதமான திட்டங்கள், புதிய வழிமுறைகள், சிறந்த அணுகுமுறைகள் மற்றும் புதிய நிறுவனச் சட்டதிட்டங்களும் அதற்கு அவசியப்படும்.

மேற்படி அனைத்து பிரிவுகளையும் உள்ளடக்கிய புதிய பொருளாதாரத்தைகட்டமைக்காமல் பழமையான திட்டங்கள் மீது தங்கியிருந்தால், நாம் மீண்டும் நெருப்பில் விழுவோம். எரிபொருள் வரிசை, எரிவாயு வரிசை, மீண்டும் உருவாகும். வரிச்சுமை கடுமையாக அதிகரிக்கும். அரச மற்றும் தனியார் துறையினரின் சம்பளம் குறைக்கப்படும். தொழில்கள் அற்றுப் போகும். 25 வருடங்களானாலும் நாட்டை மீட்க முடியாத நிலைமை உருவாகும். இவற்றைத்தவிர்க்கவேண்டுமாயின் புதிய சிந்தனைகளும் எண்ணக் கருக்களும் அவசியம்.

அதற்குரிய பின்புலத்தை ஏற்படுத்துவதற்காக எதிர்கால சந்ததிகளின் கல்வி வாய்ப்புக்களை அதிகரிக்க வேண்டும். உயர்கல்வியில்சித்திபெறும்அனைவருக்கும் பல்கலைக்கழக வாய்ப்பு கிடைக்க வேண்டும்.

முன்னைய காலத்திலிருந்தே நாம் விவசாய பொருட்களை ஏற்றுமதி செய்துள்ளோம். மீண்டும் அந்த நிலையை உருவாக்க வேண்டும். அதற்காகமுழுமையான விவசாய நவீனமயப்படுத்தல் வேலைத்திட்டத்தை நடைமுறைப் படுத்த வேண்டும்.

புதியவலுசக்திஆற்றல்தொடர்பில் நாம் கவனம் செலுத்த வேண்டும். மீள் புதுப்பிக்கத்தக்க மற்றும் பசுமைசக்தியை அதிகளவில் பயன்படுத்தும் வேலைத்திட்டங்களை முன்னெடுப்பது அவசியமாகும். அடுத்த வருடத்தின் முதற் பகுதியில் இலங்கையின் பெருமளவான மக்களை வீட்டு உரிமையாளர்களாகும் வேலைத்திட்டத்தை நாம் நடைமுறைப்படுத்துவோம்.

இதுபோன்ற பல பணிகளை 2024 வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக நாம் முன்னெடுக்க இருக்கிறோம். எமது தவறுகளினால் சுமார் 50 ஆண்டுகால அபிவிருத்திப் பாதை வீணடிக்கப்பட்டது. இந்தத் தவறுகளை யார் செய்தார்கள் என்ற குற்றச்சாட்டுகளை பேசுவதால் தீர்வு ஏற்படாது. அடுத்த 10 ஆண்டுகளில் நாம் இழந்த 50 வருடகுறைபாடுகளையும், விடுபட்டவைகளையும் சீர்செய்வோம்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்குக்கட்டுப்படுவதாக இருந்தால்நாட்டைஆட்சிசெய்வதற்கு ஆட்சியாளர்கள் எதற்கு என்று சிலர் கேள்வி எழுப்புகிறார்கள். தாம் ஆட்சிக்கு வந்ததும் ஐ.எம்.எப்.க்கு தாங்கள் நிபந்தனைகள் விதிப்பதாக கதை சொல்கிறார்கள். இவை உண்மையில் முட்டாள்தனமான கதைகள். பொருளாதாரம் பற்றி முன்பள்ளி அறிவு உள்ளவர்கள்கூட இதுபோன்ற கதைகளைச் சொல்ல மாட்டார்கள்.

தற்போதையநிபந்தனைகளுடன் இதே பாதையில் தொடர்ந்து சென்று வலுவான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பினால் மட்டுமே ஜஎம்எப் நிபந்தனைகளில் இருந்து நாம் வெளியேற முடியும் என்பதை நினைவில் கொள்ளவேண்டும். இப்படித்தான் ஏனைய ஆசிய நாடுகள்சர்வதேசநாணயநிதியத்தின் உதவியுடன் தங்கள் நாடுகளை கட்டியெழுப்பியுள்ளன.

1991இல் இந்தியா கடுமையான பொருளாதார நெருக்கடியை சந்தித்தது. தாய்லாந்து 1997 இல் கடுமையான பொருளாதார சரிவைச் சந்தித்தது. அந்த நாடுகள் மீண்டும் எழுச்சி பெறுவதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவு கிடைத்தது. ஜஎம்எப் உம் கடன் வழங்குநர்களும் முன்வைத்த கடுமையான நிபந்தனைகளின் கீழ் அவர்கள் தங்கள் பொருளாதாரங்களை மீண்டும் கட்டியெழுப்பினார்கள். பொருளாதார வீழ்ச்சிக்கான காரணங்களை கண்டறிந்தார்கள். பெரும் மற்றும் புரட்சிகரமான பொருளாதார சீர்திருத்தங்கள் அந்த நாடுகளில் மேற்கொள்ளப்பட்டன.

தாய்லாந்துக்கும்இலங்கைக்கும் இடையில் சில ஒப்பீடுகளைச் செய்ய விரும்புகிறேன். 1960 இல் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 1 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது. தாய்லாந்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2 பில்லியன்கள். 2022இல் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 74 பில்லியனாக இருந்தது. தாய்லாந்தில் 495 பில்லியன்களாக இருந்தது.

1960இல், தாய்லாந்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி எமது நாட்டை விட இரட்டிப்பாக இருந்தது. 2022இல் எமது நாட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி போல் 6 மடங்காக அதிகரித்திருந்தது. இந்த இரு நாடுகளின் தனிநபர் வருமானத்தை ஒப்பிட்டால் 1960இல் நமது நாட்டின் தனிநபர் வருமானம் 144 டொலராகவும், தாய்லாந்தில் 103 டொலராகவும் இருந்தது.

2022இல் நமது நாட்டின் தனிநபர் வருமானம் 3,474 டொலர்களாகவும் தாய்லாந்து நம்மை விட இரண்டு மடங்கு அதிகமாக 6,908 டொலர்களாகவும் உள்ளது. தாய்லாந்தினால் முடியுமானால், நம்மால் ஏன் முடியாது? இந்த பொருளாதார பலத்தை அடைய தாய்லாந்து முழுமையான மறுசீரமைப்புகளை செயல்படுத்தியது. நெருக்கடியைச் சந்தித்த அனைத்து நாடுகளும் சர்வதேச நாணய நிதியம் மற்றும் கடன் வழங்குநர்களினால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளை ஏற்றே வெற்றி பெற்றுள்ளன. அவர்கள் அதே பாதையை பின்பற்றி தமது பொருளாதாரத்தை உருவாக்கினர். இவற்றை மீறிய நாடுகள் மீண்டும் பாதாளத்தில் விழுந்தன.

எனவேஇந்தநிபந்தனைகளைப் பின்பற்றுவதன் மூலம் மட்டுமே நாம் இந்த நிலைமைகளிலிருந்து விடுபடமுடியும்என்பதைநினைவில் கொள்ளுங்கள். எவ்வளவு சிரமமானதாக இருந்தாலும் அந்த நிபந்தனைகளைப் பின்பற்றி பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்.

இந்தியா, தாய்லாந்து, வியட்நாம், தென் கொரியா, ஜப்பான், சீனா உள்ளிட்ட ஆசியப் பிராந்தியத்தில் உள்ள நாடுகள் எவ்வாறு தமது பொருளாதாரத்தை வலுப்படுத்தியுள்ளன என்பதை நாம் முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும். இந்த ஆசிய நாடுகளின் உடன்பாடுகளின் ஊடாக நமது பயணம் தொடர வேண்டும்.

ஆனால் சில குழுக்கள் இந்த பயணத்திற்கு இடையூறாக உள்ளன. இந்தப் பயணத்தை சீர்குலைக்க வேலை நிறுத்தங்கள் நடத்தப்படுகின்றன. பத்தாயிரம், இருபதாயிரம் ரூபா சம்பள உயர்வு கோரிவேலைநிறுத்தம்செய்பவர்கள் நாட்டின் எதிர்கால சந்ததியைத்தான் நாசமாக்குகிறார்கள். ஒரு தாயின் வயிற்றில்பிறந்தகுழந்தையிலிருந்து, இந்த உலகத்தின் ஒளியைக் கண்ட அனைத்து குழந்தைகளின் எதிர்காலத்தையும், அவர்கள் பத்தாயிரம் ரூபாய்க்காக நாசமாக்குகிறனர். பத்தாயிரம்ரூபாயினால் கருவில் இருக்கும் குழந்தைகளின் எதிர்காலத்தை கருக்கலைப்பு செய்கின்றனர்.

அர்ப்பணிப்பு மற்றும் கடின உழைப்பால்இந்தியாஉருவானதை பாருங்கள். அர்ப்பணிப்பு மற்றும் கடின உழைப்பால் தாய்லாந்து கட்டியெழுப்பப்பட்டுள்ளது. அர்ப்பணிப்புடனும்கடினஉழைப்புடனும் ஆசிய நாடுகள் மீண்டுள்ளன. அந்த நாடுகளின் பெற்றோர் தங்கள் குழந்தைகளின் எதிர்காலத்திற்காக தங்கள் நிகழ்காலத்தை தியாகம் செய்தனர். ஆனால் நம் நாட்டின் சில பெற்றோர் தங்கள் குழந்தைகளின் எதிர்காலத்தை தங்கள் நிகழ்காலத்திற்காக அழிப்பதற்காக வேலை நிறுத்தம் செய்கிறார்கள். நாசகார வேலைகள் செய்கின்றனர். இது வருந்தத்தக்க விடயமாகும்.

ஆனால் நாட்டின் நிலை, பொருளாதாரநெருக்கடிமற்றும்நமது பயணத்தின்சரியானதன்மைமற்றும் முன்னேற்றம் ஆகியவற்றைப் புரிந்துகொள்ளக் கூடியவர்கள் இந்த நாட்டில் உள்ளனர். சிரமங்களுக்கு முகங்கொடுத்து இதே பாதையில் தொடர்ந்தால், சிரமங்களைப் படிப்படியாகக் குறைக்க முடியும் என்பதை அவர்கள் அறிவார்கள். பொருளாதாரம் ஸ்திரமாகவும் வலுவாகவும் இருந்தால், மக்கள் மீதான சுமையைக் குறைக்க முடியும். இந்த வரவு செலவுத் திட்டத்தின் மூலம் பலருக்கு நிவாரணம் வழங்கியுள்ளோம். எதிர்காலத்தில் அந்தச் சலுகைகளை முழு நாட்டிற்கும் வழங்க முடியும்.

எனவே அரசியல் கருத்து வேறுபாடுகளைப் புறந்தள்ளி விட்டு நாட்டுக்காக அனைவரும் ஒன்றிணையுமாறு கேட்டுக் கொள்கின்றேன். இன்னும் நான்கைந்து வருடங்கள் சிரமங்களையும் தடைகளையும் எதிர்கொண்டு முன்னேறிச் சென்றால், அடுத்த தலைமுறைக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்க முடியும்.

நாட்டிலுள்ள பெரும்பான்மையான மக்கள் காணி உரிமையாளர்களாகவும், வீட்டு உரிமையாளர்களாகவும்மாறுவதைவிரும்பாதவர்கள் மட்டுமே நாம் செல்லும் பயணத்தை எதிர்க்க முடியும். விவசாய நவீனமயமாக்கலைக் கொண்டுவந்துமூன்றுவேளையும் சாப்பிட விரும்பாதவர்கள்தான் இந்தப்பயணத்தைஎதிர்க்கமுடியும். வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கைக்கு வருவதை விரும்பாதவர்களே இந்தப் பயணத்தை எதிர்க்க முடியும்.

புதிய தொழில்வாய்ப்புகள் மற்றும் வருமான வழிகளை உருவாக்க விரும்பாதவர்கள் மட்டுமே இந்த நடவடிக்கையை எதிர்க்க முடியும். இலங்கை சரியான பாதையில் தொடர்ந்து முன்னேறி, அபிவிருத்தியடைந்த நாடாக மாறுவதை விரும்பாதவர்களே இந்தப்பயணத்தைஎதிர்க்கமுடியும். நாடு வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்படுவதைவிரும்புபவர்களால் மட்டுமே இந்த நடவடிக்கையை எதிர்க்க முடியும்.

நாங்கள் எங்கள் மனசாட்சிக்குக் கீழ்ப்படிகிறோம். அரசியல் அதிகாரத்தின் மீதான பேராசையை, தேர்தல் நேரத்திற்கு மட்டும் மட்டுப்படுத்துவோம். நாட்டின் எதிர்காலம் மற்றும் தேசத்தின் எதிர்காலம் பற்றி சிந்திப்போம். நம் குழந்தைகளின் எதிர்காலத்திற்காக நம்மை அர்ப்பணிப்போம். நம் நாட்டில் பிறந்த மற்றும் பிறக்காத குழந்தைகளின் எதிர்காலத்திற்காக தியாகம் செய்ய நீங்கள் தயாரா? என்ற கேள்வியை இந்த கௌரவ சபையில் முன்வைக்கிறேன். அதனை வார்த்தைகளால் அன்றி செயல்களால் நீங்கள் நிரூபிக்க வேண்டும் - என்றார்.

## ஹிங்குராங்கொட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த விளையாட்டுத்துறை அமைச்சர், கிரிக்கெட் மைதானம் உருவாக்கப்படும் இடத்தில் சர்வதேச விமான நிலையம் உருவாக்கப்படுவது விசேடமான விடயமாகும். இதனால், விளையாட்டு சுற்றுலாவுக்கு தனி இடம் கிடைக்கும். 2024ஆம் ஆண்டுக்குள் அந்த விளையாட்டு மைதானத்தைநிர்மாணித்துமுடிக்க எதர்பார்ப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## நெடுஞ்சாலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளருக்கு கடிதம் அனுப்பியிருந்தார். இது தொடர்பில் தெரிவித்தஅமைச்சர்,அந்தவீதிகளின் பாதுகாப்புப்பணிகளைஅதிரடிப்படை அதிகாரிகள் மேற்கொள்வது அவர்களது கடமையல்ல என்பதை அமைச்சராக ஏற்றுக்கொள்கிறேன் என்று தெரிவித்தார்.

தீயணைப்புப்படை மற்றும் பிற அலுவலர்கள், நெடுஞ்சாலைகளில் பணியாற்ற வேண்டும் என்றும், 2011 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நடைமுறையில் நீண்ட நாட்களாக அதிரடிப் படை அதிகாரிகள் நெடுஞ்சாலைகளில் பாதுகாப்பு பணிகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் அமைச்சர் கூறினார்.

நெடுஞ்சாலைகளுக்கு உரிய பாதுகாப்பு திட்டம் ஒன்றை திட்டமிடப்படும்வரைகாலஅவகாசம் தேவை என்பதால், அதற்கான கால அவகாசத்தை வழங்கி, அதிரடிப் படை அதிகாரிகளை நெடுஞ்சாலை பாதுகாப்புப்பணியில்இருந்துஅகற்ற நடவடிக்கை எடுக்குமாறு பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் கோரிக்கை விடுப்பதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## எம்.ஆர்.ஐ.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மருத்துவ ஊழியர்களின் கூட்டு ஒன்றியத்தின் செயலாளர் சானக்க தர்மவிக்ரமவும் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக வைத்திய பரிசோதனைகளைமேற்கொள்வதில் இடையூறு ஏற்பட்டுள்ளது. கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தற்போது இரண்டு எம்.ஆர்.ஐ இயந்திரங்கள் மாத்திரமே செயற்பாட்டு நிலையிலுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மயிலத்தமடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களின் மேய்ச்சல் தரையை மீட்டுத்தரக்கோரி முன்னெடுக்கப்படும் அறவழிப்போராட்டத்தின் 90ஆவது நாள் நேற்றாகும். இதன்போது பண்ணையாளர்கள் மேய்ச்சல் தரை கோரி சித்தாண்டி பிரதான வீதியின் ஒருபக்கமாக ஒன்றுகூடி போராட்டத்தில் ஈடுபட்டனர்

90 நாட்கள் கடந்துள்ள போதிலும் தமக்கான நீதியும் இழப்பீடும் இதுவரை பெற்றுக் கொடுக்கப்படவில்லை என்று போராட்டத்தில் ஈடுபட்ட பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

அத்துடன், போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்து தற்போது வரையில் 182 மாடுகள் தாக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினார். ஆகவே ஆட்சியாளர்கள் இந்த விடயத்தில் உரிய தீர்வினை வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

## கூட்டமைப்பின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கம்வகித்த (பின்னர் அதிலிருந்து விலகிய) பல அமைப்புக்கள் ஒன்றிணைந்து இப்பிரகடனத்தைக் கண்டித்தும், விமர்சித்தும் அறிக்கை வெளியிட்டுள்ளன.

குறிப்பாக உலகத் தமிழர் பேரவையானது புலம்பெயர் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகத் தம்மைக் காண்பித்துக்கொள்வது தவறு எனவும் அவ்வமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இவ்வாறானதொரு பின்னணியில் உலகத்தமிழர்பேரவையின் ஊடகப்பேச்சாளர் சுரேன்சுரேந்திரன் எம்மைச் சந்தித்து இதுகுறித்துக் கலந்துரையாடுவதற்கு அனுமதி கோரியிருந்தார். இருப்பினும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மத்திய குழு அக்கோரிக்கையை அடியோடு நிராகரித்ததுடன், அதற்கான காரணங்களைத் தெளிவுபடுத்தி அவருக்குரிய பதிலும் அனுப்பிவைக்கப்பட்டது.

மாவீரர் நாளில் தமது அன்புக்குரியவர்களைநினைவுகூருவதற்கு ஒன்றுகூடியவர்களுக்கு எதிராகத் தற்போதைய ஆட்சியாளர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பிரயோகிக்கின்றது. வட, கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களுக்கு எதிரான திட்டமிட்ட இனவழிப்பு அரங்கேற்றப்பட்டு வருகின்றது.

இவ்வாறு அடக்குமுறைகள் மேலோங்கியுள்ள சூழ்நிலையில், ரணில் விக்ரமசிங்கவை மையப்படுத்தி உலகத் தமிழர் பேரவையினால் முன்னெடுக்கப்பட்டிருக்கும் இம்முயற்சியைஆட்சியாளர்களுக்கு வெள்ளையடிக்கும்செயற்பாடாகவே நாங்கள் பார்க்கின்றோம்.

அதுமாத்திரமன்றி முன்னைய காலங்களில் தமிழர்களின் நலன்களுக்கு விரோதமாக செயற்பட்டுவந்த உலகத் தமிழர் பேரவை, இன்னமும் அதிலிருந்து மாறவில்லை என்பதையும் இந்நகர்வு வெளிப்படுத்துகின்றது.

உலகத் தமிழர் பேரவையின் இந்த நடவடிக்கைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், குறிப்பாக இரா.சம்பந்தனும், எம்.ஏ.சுமந்திரனும் அங்கீகரித்திருப்பதாகத் தெரிகின்றது. கடந்த காலங்களிலும்கூட்டமைப்புஉலகத் தமிழர்பேரவையுடன்மிகநெருங்கிய உறவைப் பேணிவந்திருப்பதுடன், கூட்டமைப்பிலிருந்து வேறுபடுத்திப் பார்க்கமுடியாத அதன் தொடர்ச்சியாகவே பேரவை இயங்கிவருகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவாக செயற்படுவதாகக் கடந்த காலங்களில் கடுமையான விமர்சனங்கள் எழுந்திருந்தன. அதன் விளைவாகவே கடந்த 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத்தேர்தலில் கூட்டமைப்பின் வாக்குவங்கி வெகுவாகச் சரிவடைந்தது.

எனவே எதிர்வரும் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலும் நடைபெறவுள்ள நிலையில், அதில் இதுவரை காணாத பெரும் சரிவொன்றைச் சந்திக்கநேரும் என்பதால் கூட்டமைப்பு 'நல்ல பிள்ளையாக' செயற்பட முயற்சிக்கின்றது.

அதன்படி தமது வாக்குவங்கியைப் பாதுகாத்துக்கொள்ளும் அதேவேளை, தமது உதிரிகளான உலகத்தமிழர்பேரவையின் ஊடாக ஜனாதிபதிரணில்விக்ரமசிங்கவுக்கு அங்கீகாரத்தைவழங்கும்மறைமுக நடவடிக்கையில் கூட்டமைப்பு ஈடுபடுகின்றது.

'இமயமலை' பிரகடனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள6அம்சங்களும் வட, கிழக்கு மாகாணங்களில் வாழும்தமிழ்மக்களுக்கோஅல்லது வலிந்துகாணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் உள்ளிட்ட பாதிக்கப்பட்ட தரப்பினருக்கோ அல்லது அண்மையில் தமது அன்புக்குரியவர்களை நினைவுகூர்ந்தமைக்காகப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டவர்களுக்கோ எவ்வகையிலும் பயனளிக்காது.

மாறாக அவை தமிழர் தாயகப்பகுதிகளில் திட்டமிட்ட விதத்தில் இடம்பெற்றுவரும் இனவழிப்பை மூடிமறைத்து, அதனை நேர்மறையான விதத்தில் காண்பிப்பதற்கும், தற்போதைய அரசமைப்பில்உள்ளவிடயங்களை நடைமுறைப்படுத்துமாறுவலியுறுத்துவதன் ஊடாக தமிழ் மக்களுக்குப் போலியான நம்பிக்கையைக் கொடுப்பதற்கும்,பொறுப்புக்கூறலுக்கு முற்றுப்புள்ளிவைத்து போலியான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பும்வகையில் ஆட்சியாளர்கள் முன்னெடுத்துவரும் செயற்பாடுகளுக்கு ஆதரவளிப்பதற்கும், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு முழுமையான அங்கீகாரத்தை வழங்குவதற்குமே பங்களிப்புச்செய்யும்.

எனவே இதனை முற்றாக நிராகரிக்கவேண்டுமெனவும், இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டால் பெரும் பின்விளைவுகளைச் சந்திக்கநேரும் என்ற பாடத்தை அவர்களுக்குப் புகட்ட வேண்டும் எனவும் தமிழ்மக்களிடம் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றோம் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

## கேட்ஸ் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையான தேசிய எதிர்பார்ப்பு நடவடிக்கையை தொடங்குவது தொடர்பான விடயங்கள் குறித்து இதன்போது சிநேகபூர்வமாக கலந்துரையாடப்பட்டது.

குறித்த அமைப்பின் சர்வதேச அபிவிருத்தி மற்றும் அவசரகால நிலைமைகளுக்கு பொறுப்பான மூ-த்த அதிகாரி, திருமதி பிலார் பச்சேகோ, மீட்பு நடவடிக்கைகளுக்கான தயார்நிலைப் பணிப்பாளர் கலாநிதி சிசிர மதுரப்பெரும மற்றும் ஆசிய அனர்த்த தயார்நிலை மையத்தின்நிர்மலாபெர்னாண்டோ ஆகியோர் இந்த சந்திப்பின் போது கலந்துகொண்டனர்.

இவ்வமைப்பானது, இலங்கையில் பல திட்டங்கள் உட்படபிராந்தியத்தில் இடர் அபாய நிலைமைகளைக் குறைக்கும் நடவடிக்கைகளுக்குநீண்டகாலமாக உதவி வருவது குறிப்பிடத்தக்கது.

இந்த சந்திப்பில் இலங்கை அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் முன்னாள் மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்கவும் கலந்துகொண்டார்.

## பொதுப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளைமின்கட்டணத்தை குறைப்பது தொடர்பான யோசனையை எதிர்வரும் ஜனவரி மாதம் வழங்குமாறு மின்சார சபைக்கு ஆணைக்குழு அறிவித்துள்ளது.

## திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருகோணமலை மாவட்டத்தில் திருகோணமலைநகரம்உட்பட620 சதுர மைல் காணி இந்தியாவிடம் எரிசக்தி பொருளாதாரம் என்ற பெயரில் தரைவார்க்கப்பட்டுள்ளது.

இதனை முன்னெடுக்கும் வகையில் தான் இந்திய மத்திய நிதியமைச்சர் திருகோணமலைக்கு வருகை தந்து இந்திய மத்திய வங்கியின் கிளையை திறந்து வைத்துள்ளார்.

திருகோணமலை மற்றும் அதனை அண்மித்து வாழும் மக்களிடத்தில் கட்டட நிர்மாணங்களைமேற்கொள்ளவேண்டாமென்று அறிவித்துள்ளனர். மக்கள் காணிகள் இந்தியாவுக்கு வழங்கப்பட்டுள்ளன என்பதை ஆட்சியாளர்கள் இப்படி வேறு விதமாக அறிவித்துள்ளனர்.

ஆகவே ஆட்சியாளர்கள் மக்களிடத்திலிருந்து காணிகளை கைப்பற்றும் நடழவடிக்கைகளை நிறுத்த வேண்டும். இந்தியாவுடன் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையை உடன் இரத்துச் செய்ய வேண்டும் என்றார்.

## விசேட ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மண்சரிவில் 35 குடும்பங்களை பேரிடரிலிருந்து பாதுகாப்பதற்கும் சேதங்களைத் தணிப்பதற்கும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் இடர் முகாமைத்துவ நிலைய அதிகாரிகள் எடுத்த துரித நடவடிக்கையை இதன்போது அமைச்சர் பாராட்டினார்.

இதேவேளை நாட்டில் நிலவும் மழையுடனான காலநிலை மேலும் தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ள நிலையில் எதிர்வரும் நாட்க ளில் ஏற்படக்கூடிய அவசர நிலைமைகளுக்கு முகங்கொடுக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இராஜாங்க அமைச்சர் தென்னகோன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

சீரற்ற காலநிலை தொடர்பான அவசரகாலநிலைகளைஎதிர்கொள்ள பொதுமக்கள் எப்போதும் விழிப்புடன் இருக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க, தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் ஆசிரி கருணாவர்தன மற்றும் வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அதுல கருணாநாயக்க உள்ளிட்ட அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.




JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போது Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN
EASILY
REGISTER &
BOOK
YOUR RIDE
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

# கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறைக்கு புதிய சட்டம்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறைக்கான

திருத்தப்பட்ட புதிய சட்டமூலம் தயாரிக்கப்பட்டுவருவதாகவும் அதற்கான வரைவு தற்போது துறைசார் நிபுணர்களின் கருத்துக்களுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

மீன்பிடிப் படகுகளில் பேட்டரி மோட்டார்கள் போன்ற எரிபொருள் மாற்று வழிமுறைகள் பயன்படுத்தப்படுவதால் மீனவர்களின் உற்பத்திச் செலவு குறைவதோடு, அதன் மூலம் எரிபொருள் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடகமையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்தஅமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கை என்பது இருநாடுகளுக்கும் இடையிலான விடயம் என்பதால் இராஜதந்திர ரீதியிலேயே அதனை அணுக வேண்டியுள்ளது என்றும் கூறினார். மேலும் இந்த விடயம் தொடர்பாக பாண்டிச்சேரி மற்றும் தமிழ் நாட்டு அரசு உட்பட இந்திய ஊடகங்களுடன் கலந்துரையாடுவதே சிறந்த தீர்வாக அமையும் என்றும் அதுவே தனது நிலைப்பாடு என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

(05)

# அடுத்த வரவு செலவுத் திட்டத்தை ஹர்ஷ டி சில்வாவே சமர்ப்பிப்பார்

## சஜித் பிரேமதாஸ ஆரூடம்



அடுத்தாண்டு வரவு செலவுத் திட்டத்தை ஹர்ஷ டி சில்வா நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பார் என எதிர்க்கட்சித்தலைவர் சஜித்பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் வரவு செலவுத் திட்டம் மீதான நாடாளுமன்ற விவாதம் இடம்பெற்று வருகின்றது.

இதில் அடுத்த வரவு செலவுத் திட்டத்தை யார் முன்வைப்பது என தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுர திஸாநாயக்க எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதற்கு பதிலளித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ஹர் டி சில்வா, அதனை முன்வைப்பர் என்றும் அதில் தனது கொள்கையை வெளிப்படுத்துவார் என்றும் கூறியுள்ளார்.(05)

# முறையற்ற விதத்தில் லாபம் ஈட்டிய தரப்பினரிடமிருந்து வரிகள் அறவீடு

கோதுமை மா மற்றும் சீனி இறக்குமதியில் முறையற்ற இலாபம் ஈட்டிய தரப்பினரிடம் இருந்து உரிய வரிகளை அறவிடுமாறு உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு வழிவகைகள் பற்றிய குழு உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை எதிர்வரும் பண்டிகை காலத்தை முன்னிட்டு சந்தையில் சில பொருள்களின் விலைகள் உயர்வடைந்துள்ளன.

மேலும் முட்டை இறக்குமதியை நிறுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததை தொடர்ந்து சந் தையில் முட்டை விலை மீண்டும் அதிகரித்துள்ளது.

இதற்கமைவாக கடந்த சில நாள்களாக ஒரு முட்டை 55 ரூபா முதல் 65 ரூபா வரை விற்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(05)

# மட்டக்களப்பில் சிறுகுற்றம் புரிந்தவர்களுக்கு விற்பனை நிலையம் திறந்து புனர்வாழ்வளிப்பு



*மட்டக்களப்பில் சிறு குற்றங்களில் ஈடுபட்டவர்களை சீர்திருத்தி அவர்களுக்கு தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் செவ்வாய்க்கிழமை விற்பனை நிலையமொன்று திறந்து வைக்கப்பட்டது.*

*மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற சமுதாய சீர்திருத்த காரியாலயம் மட்டுமாநகரசபையின் அனுசரணையுடன் நீதிமன்றத்திற்குஅருகில்நிர்மாணிக்கப்பட்ட குறித்த விற்பனை நிலையம் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதி பீட்டர் போலால் திறந்து வைக்கப்பட்டது.*

*மட்டக்கப்பு பிராந்திய சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தர் முகம்மட் ஸப்றீன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், நீதிவான் நீதிமன்ற நீதிபதி பீட்டர் போல்மற்றும்சமுதாயசீர்திருத்த வேலைப்பரிசோதகர்கள் மற்றும் அபிவிருத்திஉத்தியோகத்தர்களின் மாநகர ஆணையாளர் நீதவான் நீதிமன்ற பதிவாளர் மட்டக்களப்பு சிறுவர் நன்நடத்தை நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (05)*

# தேசிய கண் வைத்தியசாலையின் வைத்தியர்கள் பணிப்புறக்கணிப்பு

*கொழும்பு தேசிய கண் வைத்தியசாலையின் வைத்தியர்கள் ஒருநாள் அடையாள பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர் .*

*இன்று (வியாழக்கிழமை) காலை 8 மணி முதல் குறித்த அடையாள பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர்; என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (05)*

# இலங்கைக்குக் கடத்தப்பட இருந்த வலி நிவாரணி மாத்திரைகள் மீட்பு

தமிழ் நாட்டிலிருந்து இலங்கைக்கு கடத்தப்படவிருந்த சுமார் ஒரு லட்சம் வலி நிவாரணி மாத்திரைகளை இந்திய கடலோர பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

தமிழ் நாட்டின் ராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் அடுத்த வேதாளை கடற்கரையில் இருந்தே இந்த வலி நிவாரணி மாத்திரைகள் இலங்கைக்கு கடத்தப்படவிருந்தன.

இதுதொடர்பானரகசியதகவல்கிடைத்ததையடுத்து குறித்த இடத்திற்கு சென்ற கடலோர பொலிஸார், சுமார் ஒரு லட்சம் வலி நிவாரணி மாத்திரைகளைக் கைப்பற்றியுள்ளனர்.

இதன்படி பறிமுதல் செய்யப்பட்ட வலி நிவாரணி மாத்திரைகளில் மொத்த மதிப்பு சுமார் 20 லட்சம் ரூபா அளவில் இருக்கலாம் என்றும் விசாரணையில் தெரியவந்துள்ளது. (05)

# விடைபெற்றார் இந்தியத் தூதர்

இலங்கைக்கான முன்னாள் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை சந்தித்து பிரியாவிடை பெற்றார்.

இதன்போது ' தனது பதவிக் காலம் முழுவதும் சிறந்த ஒத்துழைப்பை வழங்கியமைக்காக பாக்லேவுக்கு மஹிந்த ராஜபக்ச தனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் கௌரவ தாரக பாலசூரிய மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.பி.ரத்நாயக்க மற்றும் சாகர காரியவசம் ஆகியோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# தேசிய கண் வைத்தியசாலையின் வைத்தியர்கள் பணிப்புறக்கணிப்பு

கொழும்பு தேசிய கண் வைத்தியசாலையின் வைத்தியர்கள் ஒருநாள் அடையாள பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர் .

இன்று (வியாழக்கிழமை) காலை 8 மணி முதல் குறித்த அடையாள பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர்; என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (05)

# விளக்கமறியல் நீடிப்பு

மட்டக்களப்புவவுணதீவுபொலிஸ்நிலையத்துக்கு முன்னால் மாவீரர்களுக்கு விளக்கேற்றி நினைவேந்தலில் ஈடுபட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மாவட்ட அமைப்பாளர், அவரது மகன் இருவரையும் எதிர்வரும் 27ஆம் திகதி வரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் பீற்றர்போல் புதன்கிழமை உத்தரவிட்டார்.

கடந்த நவம்பர் 27 ஆம் திகதி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கட்சியினர் தாண்டியடி மாவீரர் துயிலும் இல்லத்தை அலங்கரிக்க மட்டக்களப்பு நகரில் இருந்து பட்டா ரக வாகனத்தில் சிவப்பு, மஞ்சள் கொடிகள் மற்றும் கம்பிகள் உள்ளிட்ட பொருள்களை எடுத்துச் சென்றுள்ளனர்.

அப்போது அவர்களது வாகனத்தை மறித்த பொலிஸார், வாகன சாரதியை கைது செய்து பொலிஸ்நிலையத்துக்குஅழைத்துச்சென்றுள்ளனர்.

இந்நிலையில், கைதான சாரதியை பார்ப்பதற்காக பொலிஸ் நிலையத்துக்குச் சென்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மாவட்ட அமைப்பாளர் குககுலராஜா (குகன்) மற்றும் அவரது மகன் ஆகியோர் பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் உள்ள வீதியில் மாவீரர்களுக்காக விளக்கேற்றி நினைவேந்தலில் ஈடுபட்டனர்.

அதன் பின்னர், அவர்கள் இருவரையும் பொலிஸார் கைது செய்ததுடன், 3 பேரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது, கைதான நபர்களை டிசெம்பர் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

அதன் பிரகாரம், விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சாரதியை பிணையில் விடுவிப்பதற்காக கடந்த வாரம் முன்நகர்வு விண்ணப்பப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட நிலையில், சாரதி பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அதேவேளை, ஏனைய இருவரும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறு நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் இருந்த இருவரும் புதன்கிழமை வழக்கு விசாரணைக்காக மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில்நீதிவான்பீற்றர்போல்முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது, அந்த இருவரையும் எதிர்வரும் 27ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (05)

# யாழ்ப்பாணத்தில் இளம் குடும்பப் பெண் சாவு உடற்கூறுகள் கொழும்புக்கு அனுப்பி வைப்பு

திருமணம்ஆகிஒருவருடமேயான இளம் குடும்பப் பெண் ஒருவர் நேற்று (புதன்கிழமை) உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம், உடுவில் – கற்பகப் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த சண்முகநாதன் துசீந்தினி (வயது 26) என்ற குடும்பப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண்ணிற்கு திருமணமான நிலையில் அவரது கணவர் புலம்பெயர் நாட்டில் வசித்து வருகிறார் எனவும் குறித்த பெண்ணுக்கு கடந்த 11ஆம் திகதி உடல் சுகவீனம் ஏற்பட்டதால் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றார் எனவும் தெரியவந்துள்ளது .

இந்நிலையில் மேலதிக சிகிச்சைக்காக அவர் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போது சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணைஅதிகாரிகள்மேற்கொண்டு வருவதோடுமரணத்திற்கானகாரணம் தெரியவராத நிலையில் அவரது உடற்கூற்று மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# வரி செலுத்தாதவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்

'வரி செலுத்தாதவர்கள் தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் எழுந்து வரும் நிலையில் இது தொடர்பில் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கும்' என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் 'நாட்டில் பொருளாதாரம் முழுமையாக வீழ்ச்சியடைந்து காணப்படும் ஒரு சந்தர்ப்பத்தில் இந்த வரி திருத்தங்களை பொதுமக்களால் தாங்கிக்கொள்ள முடியாது என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம்.

ஆனால் அவ்வாறு செய்யாமல் பொருளாதாரத்தை முன்னோக்கி கொண்டு செல்ல முடியாது. வரி அதிகரிப்பதை மக்கள் தாங்கிக்கொண்டாலும் அது தொடர்பில் மக்களிடம் எதிர்ப்பு இருக்கின்றது. வரி செலுத்துவதில் இருக்கும் வெறுப்பைப் பார்கிலும் வரி தொடர்பான நிர்வாகம் வலுவாக காணப்படாமையே இதற்குக் காரணம்.

வரிஅதிகரிப்பதானதுஅரசவருமானத்தை ஈட்டுவதற்காகமாத்திரம்முன்னெடுக்கப்படும் மாற்றுவழிஅல்ல. வரிஅறவிடல்மற்றும்வரி செலுத்தல்நடவடிக்கையில்அனைவருக்கும் அது சமமாக பகிரப்படுகின்றது.

அதேநேரம் வரி செலுத்தாதவர்கள் தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. அதுதொடர்பிலும்அரசாங்கம் அவதானம்செலுத்தி நடவடிக்கை எடுக்கும். –இவ்வாறு அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# 6 இந்திய மீனவர்கள் கைது

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 6 இந்திய மீனவர்கள் நேற்றிரவு கைது செய்யப்பட்டனர். அவர்களின் படகும் கைப்பற்றப்பட்டது.

யாழ்ப்பாணம் - காரைநகர் கடற்பரப்பில் கடற்படையினர் மேற்கொண்ட சுற்றுக்கால் நடவடிக்கையின் போதே மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டுள்ள இந்திய மீனவர்களை காங்கேசன்துறை கடற்படை முகாமிற்கு அழைத்துச் சென்று விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.



அதனையடுத்து, இந்திய மீனவர்களை மயிலிட்டிதுறைமுகத்தில்கடற்றொழில்நீரியல்



வளத்துறை திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்க கடற்படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## புத்தூரில் வர்த்தக நிலையத்தை உடைத்துத் திருடியவர்கள் கைது

யாழ். அச்சுவேலி- புத்தூர் பகுதியில் வர்த்தக நிலையமொன்றை உடைத்து அங்கிருந்த பொருள்களைத் திருடிச் சென்ற குற்றச்சாட்டில் மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

புத்தூர் கலைமதி பகுதியைச் சேர்ந்த 20 - 30 வயதுக்குட்பட்ட மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது குறித்த நபர்களிடமிருந்து திருடப்பட்ட சில பொருள் களையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

(05)

Tourism Northern Province
synamon global
தமிழ் 99.5 99.7
காலைக்கதிர் Kalaikkathir
BirdFather More Social More Business
IDEA FACTORY




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.12.2023இல் வெளியிடப்பெற்றது.